உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 11 வெள்ளிக்கிழமை (25-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:180

பேச்சு முயற்சி மந்தகதியில்; ஆனால்

# சொல்ஹெய்ம் நம்பிக்கையை இழக்கவில்லை!

லண்டன்,மே25

**"இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணும் முயற்சி மிக மந்த கதியிலேயே நகருகின்றது. ஆனால் அந்த முயற்சி யில் நான் நம்பிக்கை இழந்துவிடவில்லை."**

**இப்படிக் கூறியிருக்கின்றார் இந்த முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் சமாதா னத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.**

அமெரிக்காவுக்கு விஜயம் செய்தி ருந்த எரிக் சொல்ஹெய்ம் அங்கு அமெ ரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச் சர் மற்றும் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து உரையாடிய போதும், சர்வ தேச உறவுகள் தொடர்பான அமெரிக்க சபைப் பிரதிநிதிகள் மற்றும் செனட் குழுவினர் மத்தியில் உரையாற்றிய போதும், பத்திரிகையாளர்களுடன் உரையாடியபோதும் அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது-

சமாதான முயற்சிகளில் ஒரு முட் டுக்கட்டை நிலை இருப்பது உண்மை தான். ஆனால் அதன் காரணமாக நோர்வேயின் பங்களிப்பு முடிந்துவிட் டது என்பது அர்த்தம் அல்ல.

இலங்கையில் சமாதானத்தை நாம் வலிந்து உருவாக்க விரும்பவில்லை. இரு தரப்பும் இணங்கி அதனை உருவாக்க வேண்டும்.

தற்போதைய சிக்கலான நிலை யிலும்கூட அதிக நம்பிக்கையை நான்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிஸ்ரல் குழுவின் தாக்குதலில் கான்ஸ்டபிள் பலி

மட்டக்களப்பு,மே25

மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதி யில் நேற்று மாலை 5.30 மணியள வில் பிஸ்ரல் குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் வீதிக் கண்காணிப்புப் பணியில் இருந்த பொலீஸ் கான்ஸ் டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து முகத்துவாரம், மாமாங்கம், சின்னஉப போடை ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த படையினர், இரவு 8.00 மணிவரை தேடுதல்களை நடத்தினர். எனினும் எவரும் கைது செய்யப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-21)

## 3 பேர் கொண்ட குடும்பம் சுட்டுக்கொலை

கொழும்பு,மே25

களுத்துறை மீகாதென்னை பொலீஸ் பிரிவில் உள்ள யாக்கில என்ற இடத்தில் தந்தை - தாய் - மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்ட னர்.

சம்பந்தப்பட்ட குடும்பத்தினரின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 14 பேர் மட்டுமே உயிரிழப்பாம்

கொழும்பு,மே25

தம்பலகாமத்தில் நேற்று முன் தினம் கடற்படையினரின் வாகனஅணி மீது புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 14 பேரே உயிரிழந்திருப் பதும், 38 பேர் காயமடைந்திருப்ப தும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று அறிவித்தது.

உயிரிழந்த 14 பேரில் 13 பேர் கடற்படையினர் என்றும் மற்றொரு வர் சிவிலியன் என்றும் தகவல் மையம் மேலும் தெரிவித்தது. (உ)

புலிகளின் கோரிக்கைகளுக்குப் பதிலாக

# நிபந்தனைகளை முன்வைப்பதற்கு அரசும் முஸ்தீபு?

கொழும்பு,மே25

**சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு விடு தலைப் புலிகள் முன்வைத்திருக்கின்ற மூன்று கோரிக்கைகளுக்குப் பதிலாக -**

**புதிய நிபந்தனைகளை முன்வைப்பது குறித்து இலங்கை அரசு ஆலோசித்து வருவதாக சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.**

பேச்சுக்கான உகந்த சூழ் நிலையை ஏற்படுத்துவதற்கு மூன்று முன் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும் எனப் புலிகள் கோரி யுள்ளனர்.

புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும், இருதரப்பு யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் - என்பனவே புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் ஆகும்.

இந்தக் கோரிக்கைகளை சர்வ தேச சமூகம் நியாயமானவை என்று நோக்கில் பார்க்கின்ற அதேசமயம் -

இக்கோரிக்கைகளை நிறை வேற்ற முடியாத நிலையில் சர்வதேச சமூகத்தின் எரிச்சலுக்கு இலங்கை ஆளாகும் நெருக்கடியும் ஏற்பட்டுள் ளது.

புலிகளின் கோரிக்கைகளுக்குப் பதிலாக புலிகளினால் நிறைவேற்ற

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் கொலைகள்: விரைவில் வழக்கு

கொழும்பு,மே25

கடந்த வருடம் மிருசுவில் பகுதி யில் எட்டுப் பொதுமக்கள் சித்திர வதை செய்யப்பட்டு, வெட்டிப் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர் பாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆறு படையின ருக்கும் எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை களை சட்டமா அதிபர் திணைக்களம் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. (உ)

## மன்னாரில் அதிரடிப் படை சார்ஜண்ட் பலி

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று நடத் திய தாக்குதலில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த சார்ஜண்ட் ஒரு வர் உயிரிழந்தார்.

ஆராய்ச்சிகமகே பண்டா (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார். வெளியே சென்றுவிட்டு விசேட அதி ரடிப்படை முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இவர் மீது தாக் குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (ம-164-10)

## கடற்படை சிப்பாய் காயம்

கொழும்பு,மே25

திருகோணமலை நகரிலிருந்து வடக்கே 6 கிலோ மீற்றர் தொலை வில் உள்ள துவரங்காடு சந்திப் பகுதியில் கடமையிலிருந்த கடற்படை யினர் மீது நேற்று முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.(உ)

## மூதூரில் தாக்குதல்

கொழும்பு,மே25

மூதூரில் உள்ள பொலீஸ் நிலை ஒன்றின் மீது நேற்று முன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் விடு தலைப் புலிகள் தாக்குதல் நடத் தியதாகவும் -

இராணுவத்தின் உதவியுடன் பொலீஸார் பதில் தாக்குதல் நடத்தி புலிகளை விரட்டியதாகவும் -

விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று அறிவித்தது. (உ)

## முகமாலையில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்,மே25

முகமாலைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று நண்பகல் பாதைத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த சிப் பாய் ஒருவர் புலிகள் வைத்திருந்த கண்ணியில் சிக்கி உயிரிழந்தார். மற் றைய இரு சிப்பாய்கள் காயமடைந் தனர். (உ)

## முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக அறிவிப்பு இல்லை

கொழும்பு,மே25

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விடுதலைப் புலி கள் அமைப்பு மீதான தடையை அகற் றுவது குறித்து எந்த முக்கிய முடி வும் எடுக்கப்படவில்லை என்று அர சுத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

சமாதான முயற்சிகளுக்கு முட்டுக் கட்டையாக உள்ள விடுதலைப் புலி கள் மீதான தடை விவகாரம் குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத் தில் மிக முக்கிய முடிவுகள் எடுக்கப் படும் என்று பரவலாக எதிர்பார்க்கப் பட்டது.

எனினும் நேற்றிரவு 9.00மணிக்கு முடிந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தகைய முடிவு ஏதும் எடுக்கப் பட்டதாகத் தெரியவரவில்லை.

## சிற்பாசாரியார் ஜீவரட்ணம் காலமானார்



யாழ்ப்பாணம்,மே25

ஈழத்தின் மூத்த சிற்பாசாரியார் களில் ஒருவரும் திருநெல்வேலி ஆறு முகம் சிற்பாலய அதிபருமான கலா பூஷணம் ஆறுமுகம் ஜீவரட்ணம் (வயது 63) நேற்றுக் காலமானார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலை ஊழியர்கள் விசாரணையில்!

கொழும்பு,மே25

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஐந்து பாதுகாப்பு ஊழியர் கள் நேற்று இராணுவ புலனாய்வுத் துறையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, பல் கலைக்கழக பின்புற வீதியில் நின்ற 'டிராக்டர்' ஒன்றைச் சோதனையிட்ட படையினர், அதற்குள் மறைத்து வைக் கப்பட்டிருந்த கணனிகள், அச்சு இயந் திரங்கள் என்பன உட்படப் பல்வேறு பொருள்களை மீட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

டிராக்டரில் இருந்த இளைஞர் ஒருவர் தப்பிச் சென்று விட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தப் பொருள்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காகவே டிராக்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந் ததாகவும் -

இது குறித்தே பல்கலைக்கழக ஊழியர்கள் விசாரிக்கப்பட்டதாக வும் -

இராணுவப் புலனாய்வுத்துறை வட் டாரங்கள் தெரிவித்தன. (உ)

## வெடிப்பொருள்கள் வவுனியாவில் மீட்பு

வவுனியா,மே25

வவுனியாவில் நேற்று வெடிப் பொருள்களும் வெடிக்க வைக்கும் கருவிகளும் விசேட அதிரடிப்படை யினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பம்பைமடு, பாவற்குளம், நெளுக் குளம் ஆகிய பகுதிகளில் இருந்து இந்த வெடிப்பொருள்களும் ஆர்.டி. எக்ஸ். வெடிமருந்தும் கைப்பற்றப்பட் டுள்ளன.

இது தொடர்பாக சின்னத்தம்பி பாஸ்கரன், துரைராசா மோகன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ள னர். (ம-10)

## கூட்டணியின் 2 உறுப்பினர்கள் பதவி இழப்பர்

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மாநகரசபையில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட் டணி உறுப்பினர்களான எஸ்.எஸ். கணேந்திரன், கே.சின்னத்துரை ஆகியோர் மூன்று மாதங்களுக்கு மேல் சபையின் கூட்டங்களுக்குச் சமூகம் தரத் தவறியதால் சபை உறுப்பினர் பதவிகளை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதுகுறித்து யாழ். தெரிவத் தாட்சி அலுவலருக்கு உத்தியோக பூர்வமாகத் அறிவிக்கப்பட்டிருப்பதா கவும் தெரியவந்தது. (உ-5)

## நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,மே25

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித் தல் இன்று வெளியாகுகின்றது.

விசேட திறந்த மற்றும் மட்டுப்படுத் தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் இப்பதவிகளுக்கு ஆள்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விசேட திறந்த பரீட்சைக்கு 22 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப் பட்ட வயதுடைய பட்டதாரிகள் விண் ணப்பிக்க முடியும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீ சைக்கு அரச சேவையில் 10 வருட நிரந்தர சேவையை (இணைந்த

(14 பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சை ஆரம்பிக்க வழிசெய்க!

## அரசை வற்புறுத்துகிறது தமிழர் கூட்டணி

கொழும்பு,மே25

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பான ஆக்க பூர்வமான தீர்மானத்தை எடுக்காமல் தாமதிப்பதன் மூலம் சமாதான நட வடிக்கைகளைத் தாமதிக்கச் செய்ய வேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை அரசை வற்புறுத் தியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் அரசியற்குழுவின் கூட்டத் தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக் கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது விடயத்தில் அரசு தாமதிப் பது நிரந்தர சமாதானத்தை உருவாக் குவது தொடர்பான - அரசுக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையிலான - பேச்சுக்களைப் பாதிப்படையக் கூடும் என்றும் கூட்டணி தெரிவித்துள்ளது.

இரு தரப்பினரும் தாக்குதல்களில் ஈடுபடுவது சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்குப் பெரும் தீங்கு விளை விப்பதாக அமைவதுடன் மோதல்களை நீடிப்பதற்கும் இரு தரப்பிலும் பெரு மளவு உயிர்ச் சேதங்கள் ஏற்படுவ தற்கும் காரணமாகிவிடுகின்றது.

அத்துடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் பல் வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் தோன் றுகின்றது.

எனவே சண்டையை நிறுத்தி விட்டு, நோர்வே ஆரம்பித்துள்ள முன முயற்சிக்கு அமைவாக இரு தரப் பும் விரைவில் கலந்துரையாடல்க ளைத் தொடங்குவது மிகவும் முக்கிய மானது - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கலாநிதி ஆ.தியாகராசா
எம். ஏ.எம். லிட்
(காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்)



"காரை மாதாவின் தவப் புதல்வா
தரணி புகழ் தனிப்பெருந்தலைவா
காரை இந்துவின் தந்தையே
அரசியலில் அகதியானாயோ"

அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்
யா / கலாநிதி ஆ.தியாகராசா
ம.ம.வித்தியாலயம்
(C/16853)


## நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

ஆலய மஹோற்சவம் இவ்வருடம் நடைபெறாததையிட்டு அந்த நாள்களில் 26-05-2001 முதல் 12 தினங்களுக்கு காலை 8 மணிக்கு விசேட பூசை நடைபெறும்.

நாரந்தனை (88220) -ஆலய பரிபாலனசபை.


மவுண்டன் ஹோக் எக்ஸ்பிரஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
MOUTAIN HAWK EXPRES (PVT) LTD
வெஸ்டன் யூனியன் பணம் மாற்றல்
WESTERN UNION MONEY TRANSFER
யாழ்ப்பாணத்திலுள்ள
உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
பணம் அனுப்புவதற்கு
பாதுகாப்பானது! விரைவானது!!
உலகளாவிய ரீதியில் விரைவாகப் பணம்
அனுப்ப அதிதுரித வழி.
மேலதிக விவரங்களுக்கு :-
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
இல.212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பெ. எண்கள்: 021-2024, 2025, 2134
(C/16846)


## கண்ணீர்ப் பூக்கள்



கலாபூஷணம், சிற்பச் சக்கரவர்த்தி
ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்

கற்பனையும் கவினும் கலந்து - உன்
கையுளியால்
விற்பனங்கள் காட்டி
விந்தை புரிந்தவனே!
பேசா மரத்துண்டை(ப்)
பேசிக் கதைக்க வைத்த
நேசா! எம்
பாசமிகு தேர்வேந்தே!
தேர் அசையும் போது - உன்
திரு உருவம் முன்தோன்றும்
மஞ்சம் உருண்டுவர - உன்
மலர்வதனம் நினைவு வரும்
கைலாய வாகனத்தில் - உன்
கைவண்ணம் தோற்றமுறும்
நீறு நிறைய நெற்றி பொலிவுபெற
சந்தனத்தின் மேலே சாற்றியதோர்
குங்குமத்தில்
பொங்கும் கவின் கலையின்
பொலிவு கொலுவிருக்கும்
பூநூல் அசையா(ப்)
பொன்பதித்த
உருத்திராக்கத்தின்
உருவம் நினைவுவரும்

ஐயா எம் கலைவேந்தே!
நீ பிரிந்து போனாலும்
உன் நினைவுகளோ
எம் நெஞ்சில் குடியிருக்கும்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர்
- தேவஸ்தானம் சார்பாக
(C/16840)

## இரண்டாவ[illegible] [illegible]ணி திருமலை[illegible] புறப்பாடு

வலி.வடக்கு,மே25

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டு, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகள் அடங்கிய இரண்டாவது அணி நேற்றுக் காலை கப்பல் மூலம் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

44 பேர் கொண்ட இக்குழுவில் வலைபபந்தாட்ட அணி, கூடைப்பந்தாட்ட அணி (ஆண்/பெண்கள்), பட்மின்ரன் ஆண்கள் அணி ஆகிய[illegible]ரைச் சேர்ந்தோர் அடங்கி[illegible] இ[illegible]

இவர்களுடன் யா[illegible] [illegible]யாட்டு அதிகாரி எ.எப்.ஜே. ருபசிங்கம், விளையாட்டு உத்தியோகத்தர்களான க.மோகன், செ.ரமணன், க.நளாயினி,க.சந்திரமதி ஆகியோரும் சென்றுள்ளனர். (ம-86)

## நொச்சியாகமத்தில் 49 பேர் கைது

கொழும்பு, மே25

நொச்சியாகமப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது படையினரால் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 23 பேர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்கள் என்றும் ஏனையோர் தம்மீது சுமத்தப்பட்டுள்ள வழக்குகளுக்காக நீதிமன்றுக்குச் செல்லாதவர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ம-10)


விக்னா கல்வி நிறுவனம்
அளவையியல்
திரு. சயந்தன்
A/L 2003 எடுப்புகள்
ஆரம்பம்:-26-05-2001 சனி
இந்துநாகரிகம்
திரு. S.பத்மராஜா
B.A(Cey)
A/L 2002 9 -10
2003 8 -9
அலகு ரீதியான இலவசப் பரீட்சை,
இலவச வினா விடை வகுப்புக்கள்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(88202)



தேவை
யாழ். நகரில் இயங்கும் போட்டோ பிரதி நிறுவனத் துக்க போட்டோ பிரதிகள் செய்யும் வேலை பழகுவதற்கு பெண்கள் தேவை.
30-05-2001 க்கு
முன்னர் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு:-
விளம்பர இல.1287,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.



விற்பனைக்கு
சில்லறைக்கடை விற்பனவுப் பொருள்களும் கடைத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
விள.இல.1288,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்- (88196)


## கண்ணீர் அஞ்சலி

மண்டும் ஓர் இந்து மாமலை சரிந்தது அதுவும் திருநெல்வேலியில். கண்ணால் கண்டதை கையால வடித்த சிற்பி


**ஆறுமுகம் ஜீவரட்ணம்**

அவர்கள் மறைந்த செய்தியை ஒலிபெருக்கியில் கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர்களின் துணைவியார், பிள்ளைகள், சகோதரர்கள் ஆறுதல் அடையவும் எல்லாம் வல்ல விநாயகர், அம்பாளை வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார்.
(காளி கோயில்)
கோண்டாவில் மேற்கு. (C/16856)

## நெஞ்சை விட்டகலா நினைந்துருகும் 45 ஆவது நினைவுநாள்



| மலர்வு | | கண்ணெகிழ |
|---|---|---|
| 01 | | 10 |
| 03 | | 04 |
| 1971 | | 2001 |

**அமரர் சின்னையா நித்தியானந்தம்**

(யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட 3ஆம் வருட பௌதிகவியல் சிறப்புப்பிரிவு மாணவன்)

என்றும் எம் நினைவில்
நீங்கா நித்தியே!
புத்திமதி பல எமக்கு
கூறிய வித்தகனே!
கத்தி அழுகின்றோம்
உன் பிரிவால்!

யாழ்.பல்கலைக்கழகம். விஞ்ஞான பீட மூன்றாம்
(88213) வருட மாணவர்கள்.

## எம் குருநாதருக்கு அஞ்சலிகள்



சிற்பச் சக்கரவர்த்தி, தேர்ச்சுரபி
அமரர்
**ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்**
(அதிபர்-ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

எங்களின் சிற்பக்குருவாக இருந்து
சிற்ப நுணுக்கங்கள் பலவற்றை
எடுத்தியம்பிய எம் குருநாதருக்கு
மனப்பூர்வமான அஞ்சலிகள்

திர்ஷிகா கலைக்கூடம், ஸ்தபதி ந.சற்குருநாதன்
திருநெல்வேலி கிழக்கு. (குரு)ஆச்சாரியார்
(88218)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சசிலேகாதேவி செந்தில்நாதன் (தேவி)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை 53 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிலேகாதேவி செநதில்நாதன் (தேவி) 23.05.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் செந்தில்நாதனின் (முன்னாள் ஊழியர், யாழ்ப்பாணம், தேசிய சேமிப்பு வங்கி, தற்போது கனடா) அன்பு மனைவியும், சண்முகலிங்கம் (முன்னாள் முகாமையாளர், வாழைக்குலைச் சங்கம்) - பூபதிஅம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற தர்மலிங்கம்(மறவன்புலோ),மற்றும் பாக்கியம் தம்பதியினரின் மருமகளும் ஜெயநிதா, நிஷானி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாதேவனின்(கனடா) பாசமிகு சகோதரியும் மகிந்தினியின் மைத்துனியும் மிதுலன், மயூரன், மாக்சன், மதுசன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரள்ள(கனத்தை) மௌம்பரி மலர்ச்சாலையில் நேற்று (24.05.2001) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 11.00 மணியளவில் கிரியை நடைபெற்று கனத்தை பொது மயானத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

53.ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு.
T.P.NO:- 555915 (88195)

தகவல்:
க.சண்முகலிங்கம்
(தந்தை)

சிற்பச்சக்கரவர்த்தி, சிற்பராஜசிம்மன்,
தேர்ச்சுரபி, கலாபூஷணம

### ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம்

ஆச்சாரியார்
(அதிபர், ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபர். ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார் நேற்று (24-05-2001)வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகர், ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், ஜெயப்பிரகாஷ் (ஆறுமுகம் சிற்பாலயம்), ஜெயவாணி(ஆசிரியை, யா/பரியோவான் கல்லூரி), ஜெயதீஸ்(கலைப்பீடம்/யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கலாகேசரி தம்பித்துரை திருமதி நாகரட்ணம் வைரமுத்து, கந்தசாமி(அம்பாள் கலையகம்), இராசதுரை(பிரான்ஸ்), துரைராசா (ஆறுமுகம் சிற்பாலயம்), மகாலிங்கம்(ஜேர்மனி), சிவலிங்கம்(ஆறுமுகம் சிற்பாலயம்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.05.2001) பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி. (C/16855)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# நல்லைக் குமரன் மலருக்கான கட்டுரைகள்-2001

தற்போது புனரமைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் இவ்வருடம் இடம்பெறவுள்ள நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் வெளியிடப்படவிருக்கும் மேற்படி மலருக்குகந்த தரமான ஆக்கங்களை துறை சார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியார்கள் கல்வி மான்கள் எதிர்வரும் 15 – 06 – 2001 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சைவ சமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி/16857)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் பொருளாளரும்,
வேலணை பிரதேச சபை ஆயுர்வேத வைத்தியருமாகிய
**வைத்திய கலாநிதி**
**து. சண்முகராஜாவின்**
அன்புத் தாயார்

## திருமதி துரையப்பா நல்லம்மா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாளில் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை அரச சேவை
**சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்.**
(88188)

# கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம், நேர்சுரபி

## ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரி

அவர்கள் 63 ஆம் வயதில் காலமான செய்தி கேட்டு ஆறாத் துயரடைந்துள்ளோம். அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி. நாகலிங்கம்
மூத்த விநாயகர் தேர்த்திருப்பணி தலைவரும்,
லிங்கம்ஸ் பந்தல் உரிமையாளரும்.

கரணவாய் . நெற்கு.
(88210)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
**ஜீ. தீஸ் அவர்களின்**
பாசமிகு தந்தையார்

## கலாபூஷணம் ஆ. ஜீவரட்ணம்

(சிற்பச்சக்கரவர்த்தி)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லடி இளைஞர்கள்,
திருநெல்வேலி.

(88201)

# கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி ஆறுமுகம் சிறாலய உரிமையாளர்
**கலாபூஷணம் ஸ்தபதி**

## ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆராத் துயரம் அடைந்துள்ளோம் அன்னாரின் மறைவால் துயருறும் அவர் தம் குடும்பத்தவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சாயி துர்க்காதேவியை பிரார்த்திகின்றோம்.

பரிபாலன சபை
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்
கொக்குவில்
(88205)

# கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம்
ஆறுமுகம் சிற்பாலயத் தலைவர்

## ஆறுமுகம் ஜீவரட்ணம்

ஆச்சாரி அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம் அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய புத்தூர் ஸ்ரீ காளி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஐ. நடராசாவும், சகோதரர்களும்
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
(85211)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மே 25

கல்வி வலயங்களில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்கள், அலுவலர்கள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(க–4)

## விளக்க மறியல் நீடிப்பு

தென்மராட்சி, மே 25

மிருசுவில் புதைகுழிப் படுகொலைகள் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 14 படையினரையும், தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இவர்கள் 14 பேரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் ஆறாந் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை ஒட்டுவெளி வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்ட சிப்பாயின். மரணம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு படையினருக்குமான விளக்க மறியலும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ம-117)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜீவமணி சாந்தகுமார்

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் நாவலர் றோட் அரியாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஜீவமணி சாந்தகுமார் நேற்று முன்தினம் (23 – 5 – 2001) காலமானார்.

இவர் காலஞ்சென்ற சாந்தகுமாரின் மனைவியும் பிரமிளா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிரவீனன் (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராமசாமி, விசாலாட்சி ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற சண்முகநாதன், ஞானாம்பாள் ஆகியோரின் மருமகளும் ஜீவரட்ணம் (கொழும்பு), தியாகராசா (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் சுபத்திரா (கொழும்பு), திலுக்கா (கொழும்பு), காலஞ்சென்ற சிவகுமார், பரமேஸ்வரன் கமலாதேவி, விமலாதேவி, சகுந்தலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27 - 05 - 2001 அன்று காலை 10 . 00 மணியளவில் 20, கந்தபுராண வீதி, கந்தர்மடம் என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிரமிளா** (மகள்)
**பிரவீனன்** (மகன்)
20, கந்தபுராணவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(88219)

# மேலும் நான்கு மாணவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேற்றும் நான்கு மாணவர்கள் யாழ். நீதிமன்றில் ஆஜராகினர்.

நகரின் பிரபல்யமிக்க கல்லூரிகளைச் சேர்ந்த இந்த மாணவர்களை தலா 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு அனுமதித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பத்து மாணவர்களும் யாழ். நீதிமன்றில் ஆஜராகிவிட்டதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-5)

# சுகாதார கற்கைகள் அலகு

## மருத்துவ பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஜூலை 2001 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆரம்பமாகவிருக்கும் பின்வரும் முழு நேர கற்கைநெறிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **சமுதாய சுகநலவியல் டிப்ளோமா**
  (Diploma in Community Health)
  2 வருடங்கள்
- **மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியல் டிப்ளோமா**
  (Diploma in Medical Laboratory Technology)
  2 வருடங்கள்
- **இயன்மருத்துவவியல் டிப்ளோமா**
  (Diploma in Physiotherapy)
  2 வருடங்கள்
- **ஆற்றுகைப்படுத்துகை டிப்ளோமா**
  (Diploma in Clinical Counselling)
  2 வருடங்கள்
- **மருந்தாளர் பயிற்சி நெறி சான்றிதழ்**
  (Certificate in Pharmacy)
  1 வருடம்

(கற்கை நெறிகள் யாவும் ஆங்கிலத்தில் நடைபெறும்.)

### தகைமைகள்:

1. வயதெல்லை 18 — 28
2. பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் அல்லது உயிரியல் உட்பட க.பொ.த. (உ/த) பரீட்சையில் 04 பாடங்களில் சித்தியும், க. பொ. த. (உ/த) 2000 ஆம் ஆண்டுப் பிரிவில் தோற்றியோருக்கு 03 பாடங்களில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.
3. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தேவையான ஆகக் குறைந்த தகைமைப் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
4. ஆங்கில அறிவு அத்தியாவசியம்.

### கற்கைநெறிக் கட்டணம்:

ஒரு வருட கற்கை நெறிகளுக்கு ரூபா 7,000.00 இரண்டு வருட கற்கை நெறிகளுக்கு ரூபா 15,000.00 செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் யாழ். பல்கலைக்கழக காசாளர் அலுவலகத்தில் ரூபா 25.00 செலுத்திப் பற்றுச்சீட்டுடன் மருத்துவ பீடத்தில் அமைந்துள்ள சுகாதார கற்கைகள் அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 2001 - 05 - 31
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

இணைப்பாளர்,
சுகாதார கற்கைகள் அலகு,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணம்.
(88208)

# கண்ணீர்ப்பூக்கள்

'கலாபூஷணம்' ஸ்தபதி

## ஆறுமுகம் ஜீவரத்தினம்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நீண்ட பலவருடங்களாக பரிபாலன சபையின் தலைவராகவும், பொருளாளராகவும் பணியாற்றி அம்பாளின் ஆசியுடனும், துணையுடனும் ஆலயத்தில் பல திருப்பணிவேலைகளையும் நிறைவேற்றி அண்மையில் பஞ்சதள இராஜகோபுரமும் அமைத்து இராஜகோபுர கும்பாபிஷே வைபவங்களிலும் கலந்துகொண்டு பண்புடனும், மாண்புடனும் வாழ்ந்த சென்ற ஆ. ஜீவரத்தினம் அவர்களின் மறைவுச்செய்திகேட்டுஆறாத் துயரம் அடைந்துள்ளோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குவதுடன் குடும்பத்தவர் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைக!!!

பரிபாலன சபை
ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானம்
திருநெல்வேலி.
(83199)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு அருகில் புன்னாலைக்கட்டுவன் வீதியின் வடக்கே உள்ள 10 பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: எம். இராமலிங்கம், மே/பா சின்னராசா, மயிலணி, சுன்னாகம். (88180)

## கார் விற்பனைக்கு

ஆசிரியரொருவரின் சொந்தப் பாவனையில் உள்ள மொறிஸ்மைனர் (1000) கார் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு:- இல. 466 7C, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (அருள் ஆச்சிரமத்துக்கு முன்னால்) (88164)

## தமிழ்த்திறன் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தமிழ்த் திறன் போட்டிகளை எதிர்வரும் முப்பதாம் திகதிக்கு முன்னர் நடத்தி கோட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு சகல அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ–117)

## விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன் தொட்டிகள், Air Fump மற்றும் அழகுபடுத்தும் பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: குட்டி 40/17 (16/16), சீனியர் லேன், யாழ்ப்பாணம் (பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள லேன்). (88174)

நெல்லியடி, திக்கம் றோட்டில் வதிரி உல்லையன் நல்லை அம்மன் கோயிலுக்கு அருகில், யாழ். நெல்லியடி, மெ. மி. த. கலவன் பாடசாலை ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையார் வீட்டில், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நவீனரக கல்யாணக் கூறைகள், காஞ்சிபுரச் சேலைகள், கல்யாண, நடன, மேக்கப் செற் மற்றும் பல. தொடர்பு:-சு.சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி. (87969)

## மோட்டார் சைக்கிள் விற்பனை

பெண்கள் செலுத்தக்கூடிய மிகச்சிறிய ரக மோட்டார் சைக்கிள் (ஸ்கூட்டர்ரகம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: No. 617, அரசடிச்சந்தி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (88184)

## அபூர்வ ஜோதிடம்

வடநாட்டு சித்தரின் இணையற்ற ஏட்டினால் தீராத நோய்க்கு உடனடித் தீர்வு: அதிஷ்டத்தை நோக்கிய வாழ்வு சனி, ஞாயிறு 8. 30–5. 00 p.m ஆடிய பாத வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (88156)

## தவறிவிட்டது

வடுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த கனகசுந்தரம் சுபந்தினி என்பவருடைய, தேசிய அடையாள அட்டை (இல. 645361652 V)யும் வி. அ. அட்டையும் யாழ். போதனா வைத்தியசாலையில் 21-05-2001 அன்று தவறிவிட்டன. கண்டுடெடுத்தவர்கள் வை. ஜி. பாமசியில் (யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக) ஒப்படைத்துதவவும். (88146)

## படிவம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கான படிவம் விற்பனையாகிறது. விலை 2ரூபா. தொடர்பு: நாயகபாலன், மானிப்பாய். (88184)

## கணனி வகுப்பு

சகல வயதினருக்கும் ஏற்ற வகையில் தனித்தனியாக கொம்பியூட்டரிலேயே கற்பிக்கப்படும். A.L ராகவன், மூன்றாம் கட்டை, கல்வியங்காடு. (27-05-2001 மாலை 4.00 மணிக்கு பிரிவு II ஆரம்பம்). (88166)

## முன்பள்ளிகளைப் புனரமைக்க உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளிகளை யாழ். மாவட்ட சர்வோதய இயக்கம் 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச்செய்துகொடுக்க முன்வந்துள்ளது.

இதன் பொருட்டு சேதமடைந்த முன்பள்ளிகள் பற்றிய விவரங்களை சர்வோதய இயக்கம் திரட்டியுள்ளது.

திரட்டப்பட்ட தரவுகளைக் கொண்டு 20 முன்பள்ளிகளை இவ்வருடம் புனரமைப்புச் செய்துகொடுக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் மற்றும் கரவெட்டி, பருத்தித்துறை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இம் முன்பள்ளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ஐ–152)


# இதய அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர்
திரு. வி. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
ஸ்கந்தவரோதய இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (88165)

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## கலாநிதி ஆ. தியாகராசா M.A.M.LITT

(முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர், கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்)

பிறப்பு: 17-04-1916
இறப்பு: 25-05-1981

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானிலுறை
எம் வள்ளலே!
வளமாக வாழுகிறோம். ஆனால் வழிசமைத்த
நீங்களோ இங்கில்லை.
உம்மிடம் கற்றதனால் உலகத்தையே
நாம் அளந்தோம்!
உம்மை நினைக்கையிலே எங்கள் உள்ளம் உருகுதைய்யா!

உங்களை என்றும் மறவாத மாணவன்:
சி. சிவபாதம் (வங்கியாளர்)
'தவபவனம்'
பொன்னம்பலம் வீதி,
காரைநகர். (88070)

# வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001



| | | |
|---|---|---|
| 1) கொடியேற்றம் | 26-5-2001 சனி | பகல் 11.30 மணி |
| 2) சங்காபிஷேகம் (உற்சவ மூர்த்திக்கு) | 27-5-2001 ஞாயிறு | காலை 9.30 மணி |
| 3) சங்காபிஷேகம் (மூலமூர்த்திக்கு) | 29-5-2001 செவ்வாய் | காலை 9.30 மணி |
| 4) வேட்டைத்திருவிழா | 02-6-2001 சனி | பி. ப. 2.00 மணி |
| 5) சப்பறம் | 03-6-2001 ஞாயிறு | மாலை 5.30 மணி |
| 6) தேர் | 04-6-2001 திங்கள் | பகல் 11.00 மணி |
| 7) தீர்த்தம் | 05-6-2001 செவ்வாய் | மு. ப. 10.30 மணி |

அடியார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

பரிபாலன சபையினர்,
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்,
வேலணை - 8.
(88182)

# இணுவில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள்

இரண்டும் இணைந்து நடத்தும்

## இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: 27—05—2001 ஞாயிறு காலை 9 மணி முதல்
இடம்: பரமானந்த சனசமூக நிலையம்,
கந்தசுவாமி கோயில் வீதி, இணுவில்.

கண்பரிசோதனையை மேற்கொள்பவர்கள்:-
பிரபல S. M. பெணான்டோ ஸ்தாபனத்தினர்

இச் சேவையில் நலிவுற்றோருக்கு மட்டும் அவர்களுக்குரிய மூக்குக்கண்ணாடி வழங்கப்படவுள்ளது.
குறிப்பு:– முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின்படியே கண்பார்வை பரிசோதனைப்படி மேற்கொள்ளப்படும்.

லயன் K. தேவராஜா
தலைவர்,
இணுவில் கழகம்.

லயன் A. இருதயநாதன்
தலைவர்,
மானிப்பாய் வட்டம்.

சேவை இணைப்பு:- லயன் S. S. தங்கராஜா
மாவட்டத் தலைவர் கழகவிருத்தி.
(88176)

கணபதி துணை

# விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசி மாதம் 13ஆம் திகதி (27-05-2001) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப நன்நாளில் காலை 9.58 மணிமுதல் 11.34 மணி வரையான சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்.

காரைநகர் களபூமி
தன்னை பிள்ளையார்
கோவில்
பிரம்மஸ்ரீ
குமாரசாமி ஐயர்
தம்பதிகளின்
பௌத்திரனும் எமது
புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
ஸ்ரீரங்க சர்மா
அவர்களுக்கும்



சரவணை மயிலாட்பூலம்
ஐயனார் கோயில்
ஆதீன கர்த்த
கணேதீஸ்வரக்குருக்கள்
தம்பதிகளின்
பௌத்திரியும் எமது
புத்திரியுமான
சௌபாக்கியவதி
சந்தானலட்சுமி
அவர்களுக்கும்

கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்ய, வவுனியா புளியடி சித்தி விநாயக பெருமானும் கொழும்பு மேட்டுத்தெரு, ராஜராஜேஸ்வரி அம்பாள் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தத்தில், கொழும்பு கொச்சிக்கடை தம்பையா சத்திரம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சுப மங்களம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ கு. கணேசக்குருக்கள்
ஜெயலஷ்சுமி தம்பதிகள்
இல.51, குருமன் காடு, வவுனியா.

சிவஸ்ரீ க. சபாபதிக்குருக்கள்
வரதலட்சுமி தம்பதிகள்
இல.94/4, மேட்டுத்தெரு, ராஜராஜேஸ்வரி
தேவஸ்தானம், கொழும்பு.

(இரு வீட்டார் அழைப்பு)
(88171)

# பாராட்டும் வரவேற்பும்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்றுள்ள

## திரு. வி. எஸ். சொக்கலிங்கம்

அவர்களுக்குப் பாராட்டுதல்களையும், இதுவரை காலமும் தீவுப்பகுதிக்கெனத் தாங்கள் ஆற்றிய சேவைக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்வதோடு புதிய பொது முகாமையாளராகக் கடமையேற்றுள்ள

## திரு. சு. மணிவாசகன்

அவர்களுக்கு வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்,
சகல அலுவலர்களும்,
தீவகம வடக்கு,
ஊர்காவற்றுறை.
(சி/16834)

உதயன்

## குற்றங்களுக்கு மௌனத் துணையா?

மட்டக்களப்பு நீதிபதி கலாநிதி ஏ.அபதுல் கபூர் இதுவரை வெளியே தெரியாத புதிய தகவல்களை வெளியிட்டிருக்கிறார். குற்றவாளிகளில் நான்கு சதவீதமானோர் மட்டுமே தண்டிக்கப்படுகிறார்கள். எஞ்சிய 96 சதவீதத்தினரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடுகின்றனர் என்ற புள்ளி விவரத்துடன் கூடிய-ஆச்சரியத்தைத் தரும் - தகவல்கள் அவை!

குற்றச்செயல்கள் - ஏன் வன்முறைகள் - பெருகியுள்ள காலம் இது. கற்றவர்கள், கற்காதவர்கள், பொருளாதார வசதி நிறைந்தவர்கள், குறைந்த வருமானம் உடையோர், வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள், மேற்குடியினர், கீழ்க்குடியினர் என்று சமூகத்தில் உள்ள எல்லாத் தரப்பினர்களுமே குற்றச்செயல்களில் மிகத் தாராளமாக ஈடுபடுகின்றனர்.

குற்றங்கள் பெருகி அவை மலிந்துள்ள இக்காலத்தில் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன நிறுத்தப்படுவது மிகக் குறைவு. உண்மையான குற்றவாளி தப்பிவிட, யாரோ ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகிறார். நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுகின்றார்; தண்டனையும் பெறுகிறார்.

அனேகமான குற்றச் செயல்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளாமலே சம்பந்தப்பட்ட கோவைகளை மூடிவிடுவதே இங்குள்ள "வழமையான நடைமுறை"; மிகப் பெரிய குற்றச் செயல்கள் - கொலைகள், மொத்தக் கொலைகள் - என்பன கூட ஆரம்பத்தில் பிரமாதப்படுத்தப்படுவதுபோல, விசாரணைகள் ஒழுங்காகவும் சீராகவும் நடத்தப்படாமலும் பொலீஸாரால் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இயலாத தன்மையாலும் தொப்பெனப் போடப்படும்; சில மாதங்களில் அது மறக்கப்பட்ட விவகாரமாகிவிடும்!

அதேவேளை,

குற்றவாளிகள் என்று கருதப்படுவோர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டாலும் அரசியல் மற்றும் பல வகைச் செல்வாக்குகளைப் பயன்படுத்தி தண்டனை எதுவும் பெறாமலே தப்பி விடுகின்றனர்; சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடுகின்றனர்.

சட்டங்களில் குறைபாடுகள், "ஓட்டைகள்" இருப்பதும் இத்தகைய ஒரு பயனற்ற, ஆனால் பாரதூரமான நிலைக்குக் காரணம் என்கிறார் நீதிபதி அப்துல் கபூர். இப்போது நடைமுறையிலுள்ள சட்டங்களில் மிகப் பலவும் பிரித்தானியர்களால் இயற்றப்பட்டவை. இவை அடிக்கடி திருத்தப்படுகின்றனவே அன்றி முற்றாகப் புதுக்கி எழுதப்படுவதில்லை.

குறிப்பாகக் குற்றவியல் சட்டங்கள் இன்னும் இந்த நாட்டு மக்களின் சமூக, சமய கலாசார நெறிமுறைகளைக் கருத்திற் கொண்டு, அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை. செல்வாக்கு உள்ளவர்கள், குற்றம் புரிந்து விட்டும் தண்டனையில் இருந்து தப்புவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நீதிபதி அப்துல் கபூர் மேலும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

குற்றம் செய்யும் மனோபாவம் உள்ளவர்கள் எத்தனை தடவைகள் தண்டனை பெற்றாலும், சிறைவாசம் அனுபவித்தாலும், திருந்துவது அரிது. அவர்கள் தாமாகத் திருந்தாவிட்டால் - ஒவ்வாத மனோபாவத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் - சட்டங்களால் எதுவும் செய்ய முடியாது என்பது ஒருபுறம். விளைவு சட்டங்கள் வலிமையற்றனவாகிவிடுகின்றன; வெறும் காகித ஆவணம் ஆகிவிடுகின்றன.

ஆனால், சட்டங்களே குற்றவாளிகள் தப்பிக்கொள்ள இடமளிக்கின்றன என்றால், நீதிமன்றங்களால் சமூகத்துக்குப் பெரும் பயன் கிடைக்குமோ - அவற்றிடம் இருந்து மக்கள் எதிர்பார்க்கும் பயன் கிடைக்குமோ என்பது சந்தேகமே. இது பெரும் ஏமாற்றத்துக்கு உரிய ஒன்றாகும்.

குற்றங்கள் மலிவதற்குச் சட்டங்களே மௌனமாகத் துணைபோகின்றன. இந்நிலை உடனடியாக நீக்கப்படாவிட்டால் இந்த நாடு வன்முறை, வன்செயல் குகையாவதைத் தடுக்க முடியாது.

### ஆசிரியர் கலாசாலை இயங்குவதால்
# திருநெல்வேலி முத்துத்தம்பி ம.வி. மாணவரின் கல்வி பெரும் பாதிப்பு
### 50 வீதமான கட்டடங்கள்

யாழ்ப்பாணம்,மே25

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கடந்த பத்து வருடங்களாக பலாலி ஆசிரியர் கலாசாலை இயங்கி வருவதனால், மேற்படி பாடசாலை மாணவர்களின் கல்வியில பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலையின 50வீதமான கட்டடங்களை பலாலி ஆசிரியர் கலாசாலை [illegible]ள்ளதால், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பாதிப்பு தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் சுட்டிக் காட்டியுள்ளது.

இப்பாடசாலையின் பிரதான மணடபம், பரீட்சை மண்டபம் போன்றவை கலாசாலையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் மாணவர்கள் தமது தேவைகளுக்கு இவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளனர்.

ஆய்வுகூடம் மற்றும் நூலகக் கட்டடங்களையும் மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலைமை தொடர்கிறது.

பலாலி ஆசிரியக் கலாசாலையினால் தற்பொழுது பயன்படுத்தப்படும மேற்படி பாடசாலைக் கட்டடத்தை மீளப் பெற்றுத் தருமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அமைச்சு மட்டத்தில் தற்போது கோரிக்கை விடுத்துள்ளது. (க-5)

## நாட்டு நடப்பு

மாலை மரியாதை மேளம்
மக்கள் புடை சூழ்ப் பவனி
காலை வேளையில் கோட்டடியில்
கலியாணமோ? பாரடி கனகி
வேலை தேடித் திரிந்த எங்கள்
வேதாசலத்தார்க்குப் பதவி
வாலைக் குமரன் போல் வாறார்
வாச்ச பதவி ஒரு ஜே.பி.!

*- விகடகவி மு.திரு.*

# விசாரணைகளுக்காக மேலும் 32 பேர் அழைப்பு

யாழ்ப்பாணம்,மே25

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முதற்கட்டமாக விசாரணை செய்தவர்களில் மீள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்ட மேலும் 32 பேரின் பெயர் விவரங்களை அறிவித்துள்ளனர்.

காணாமற்போனவர்களின் பெயர் விவரமும் காணாமற்போனோர் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களின் பெயர் விவரமும், மீள்விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரமும் முறையே வருமாறு:-

✪ கிருஸ்ணபிள்ளை குணேந்திரராசா (கோவை.இல.பி.54 - பொலிகண்டி தெற்கு, வல்வெட்டி) குணேந்திரராசா விஜயா (பொலிகண்டி தெற்கு வல்வெட்டி) ஜே-395 கிராமசேவையாளர்.

✪ இராசையா சசிந்தன் (கோவை. இல.பி.63 - நவாலி வடக்கு, மானிப்பாய்) இராசையா செல்வராணி (நவாலி வடக்கு, மானிப்பாய்)

✪ சின்னத்துரை கதிர்வேற்பிள்ளை (கோவை.இல.பி-84 - கரவெட்டி, நெலலியடி) நடராசா பரமேஸ்வரி, பரமேஸ்வரியின் தாயார் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

✪ நடராசா அகிலராசன் (கோவை.இல.ஏ-12-194, இராமநாதன் வீதி, கோப்பாய்) கந்தையா நடராசா, அகிலராசனின் தாயார்.

✪ ஐயன்பிள்ளை - நிருஜன் (கோவை.இல.பி-89 - காரைக்கால் வீதி, இணுவில், சுன்னாகம்) ஐயன்பிள்ளை பூரணம், வேலன் ஐயன்பிள்ளை, ஐயன்பிள்ளை ஜெகநாதன்.

✪ கதிரவேலு ஜயந்தினி (கோவை.இல.ஏ.21 - அரசடி, நவாலி) கதிரவேலு நகுலேஸ்வரி (அரசடி, நவாலி).

✪ பேர்ணாந்து ஜெயகண்ணன் (கோவை.இல.பி.130 - 218, குருசோ வீதி, யாழ்ப்பாணம்) ஆசீர்வாதம் பேர்ணாந்து, சுபாஜித் (மருமகள், அரியாலை) ஜெயகண்ணன் சுபாஜினி (காணாமற்போனவரின் மனைவி).

✪ கணபதிப்பிள்ளை யோகராஜா (கோவை.இல.ஏ-6 - இலவுக்காடு, அச்சுவேலி) செல்லத்துரை கமலாதேவி, அச்சுவேலி வடக்கு கிராம சேவகர்.

✪ நடராஜா ஜீவரட்ணம் (கோவை. இல.பி-41 - வேம்பொடுகேணி, பளை) நடராஜா விஜயரட்ணம், கொடிகாமம் அன்ரனி சலூன் உரிமையாளர்.

✪ ஜெகநாதன் விஜயகுமார் (கோவை.இல.பி-49-97, ஆஸ்பத்திரி வீதி, கொடிகாமம்) தம்பு ஜெகநாதன் (அப்பகுதி கிராமசேவகர்)

✪ ஐயாத்தம்பி உதயகுமார் (கோவை இல.பி-2 - மீசாலை மேற்கு, சாவகச்சேரி) கார்த்திகேசு கோவிந்தபிள்ளை, ஐயாத்தம்பி தெய்வானைப்பிள்ளை.

✪ அப்பாகுட்டி நாகராஜா (கோவை இல.ஏ 3 - மீசாலை வடக்கு, சாவகச்சேரி) நாகராஜா திலகவதி.

✪ வல்லிபுரம் நாதன் பவானந்தன் (கோவை இல.பி-21 - கச்சாய் றோட், கொடிகாமம்) வல்லிபுரம் நாதன் நீலாம்பிகை ஸ்ரீசத்தியராஜா நாதன், வல்லிபுரம் பவானி, சின்னத்தம்பி ஏகாந்தராஜா.

✪ சின்னத்தம்பி ஞானேந்திரன் (கோவை இல. பி-83 - முகமாலை, எழுதுமட்டுவாழ்) பரமலட்சுமி (கரணவாய், கரவெட்டி) ஞானேந்திரன் சந்திரலேகா.

✪ பண்டாரரத்தினம் செல்வகுமார் (கோவை இல.பி-126 - தச்சன்தோப்பு, கைதடி) இராசமணிரத்தினம், கோபாலகிருஷ்ணன், ஜீவபாலன் (பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு)

✪ கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன் (கோவை இல. பி07 - கைதடி, நாவற்குழி) கேதீஸ்வரன் மனோகரி.

✪ சின்னத்தம்பி ஜெயபாலன் (கோவை இல. பி-128 - ஆவரங்கால் தெற்கு புத்தூர்) ஆறுமுகம் தங்கராசா, அம்பலம் சின்னப்பிள்ளை, ஜெயபாலனின் தம்பி சிவபாலன், தங்கராசாவின் அம்மா மீனாட்சி.

✪ தங்கவடிவேல் ராஜேந்திரகுமார் (கோவை இல. பி-92, அல்வாய், பருத்தித்துறை) தாமோதரம்பிள்ளை தங்கவடிவேல், அமிர்தலிங்கம் அருளானந்தம் (15,பி.ஏ.தம்பிலேன் வண்ணார்பண்ணை) சுப்பிரமணியம் (ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்).

✪ திருநாவுக்கரசு சுதாகரன் (கோவை இல. பி-86 மறவன்புலோ, சாவகச்சேரி) சண்முகம் நித்தியானந்தன், சண்முகம் நித்தியானந்தனின் மனைவி.

✪ ஜோன்பிள்ளை அன்ரன் அமரநாதன் (கோவை இல. பி-21 - கேரதீவு, நாவற்குழி) மேரி ஆன்கலிஸ்ரா, கோபாலசிங்கம் ஜீவபாலன்.

✪ வல்லிபுரம் சுபாஸ்கரன் (கோவை இல. பி-85 - மறவன்புலோ, சாவகச்சேரி) இவரது உறவினர்கள், காணாமற்போனமை தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள்.

✪ கனகசூரியர் சசிகரன் (கோவை இல. பி-50 மட்டுவில் மேற்கு, சாவகச்சேரி) கனகேசு கனகசூரியர்.

✪ ஜெகநாதன் விஜயகுமார் (கோவை இல. பி-49-97, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி) தம்பு ஜெகநாதன்.

✪ நவரட்ணம் ஆனந்தராஜா (கோவை இல. பி-44 - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு) திரிவேதியம்மா நவரட்ணம், வள்ளி நவரட்ணம், பிறேமலதா நவரட்ணம், நவரட்ணம் தனராஜா, நவரட்ணம் விமலராஜா.

✪ சின்னத்தம்பி சிவகுமார் (கோவை இல. ஏ-13 - நாவற்குழி கிழக்கு தச்சன்தோப்பு, கைதடி) சிவகுமார் விஜயா.

✪ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (கோவை இல. பி-131 - 105/3, நாவற்குழி தெற்கு, கைதடி) சுபாபதி சிதம்பரப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை கௌரி.

✪ ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிற் (கோவை இல.பி-11 - உயரப்புலம், ஆனைக்கோட்டை) மரியறஞ்சிதம் ஆரோக்கியநாதன், மேரிராதிகா.

✪ பொன்னன் றவீந்திரன் (கோவை இல.ஏ-11 - கைதடி கிழக்கு, கைதடி) றவீந்திரன் ஜெயராணி (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்).

✪ தர்மலிங்கம் சுபாகரன், நடராஜா ஜெயராஜா (கோவை இல. பி-4, 785, கண்டி வீதி, அரியாலை) தர்மலிங்கம் சுதாகரன், கணபதிப்பிள்ளை நடராஜா, ஜெயராஜா சிவக்கொழுந்து (மீசாலை வடக்கு), தம்பையா சண்முகம், கார்த்திகேசு நடராஜா, நடராஜா நவமணி, நடராஜா ஜெயரட்ணம்.

✪ அப்புத்துரை ஜெயரத்தினம் (கோவை இல. பி-34 - 393/13, கோயில் வீதி, நல்லூர்) அப்புத்துரை ஞானரத்தினம்.

✪ இளையதம்பி திருபாலசாந்தன் (கோவை இல. பி-39 - மந்துவில் கிழக்கு, கொடிகாமம்) இளையதம்பி ஆசையம்மா.

✪ சுப்பிரமணியம் இராசலிங்கம் (கோவை இல. பி-99, மூளாய், சுழிபுரம்) சுப்பிரமணியம் செல்வராணி (சங்கானை) விஸ்ணு.

மீள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருப்பவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு சமுகமளிக்கும் போது காணாமற்போனவரின் புகைப்படத்தையும், ஆவணங்களையும் தவறாது எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எஞ்சியவர்களின் பெயர் விவரம் பின்னர் வெளிவரும். (ஐ-ஒ-6)

## தொழிலாளி தாக்கப்பட்டார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதாரச் சுத்திகரிப்புத் தொழிலாளியாகக் கடமையாற்றும் ஒருவர் தாம், தலைமை மேற்பார்வையாளர் ஒருவரால் தாக்கப்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மதுபோதையில் இருந்த தலைமை மேற்பார்வையாளரே தன்னைத் தாக்கியதாக எஸ்.சேகர் என்ற சுத்திகரிப்புத் தொழிலாளி முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து குறிப்பிட்ட தலைமை மேற்பார்வையாளர் கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்தாரா என்பதைக் கண்டறிவதற்காக அவர் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதேவேளை, வைத்தியசாலை பொலீஸார் சம்பவம் தொடர்பாக இருவரையும் விசாரணை செய்து வருகின்றனர். (உ-10-6)

## சிங்களத்தில் கடிதங்கள்

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சில் இருந்து தனிச்சிங்களத்தில் படிவங்களும் கடிதங்களும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

அண்மையில் சம்பந்தப்பட்ட அமைச்சில் இருந்து பிரதேச செயலகங்களில் உள்ள ஆளணி தொடர்பான படிவங்களும் கடிதமும் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சிங்கள மொழி தெரியாத உத்தியோகத்தர்கள் படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கு திண்டாடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. (ஐ-175)

## இரண்டரை லட்சம் பனம் விதைகள் நடுவதற்கு முடிவு

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையால் இந்த வருடம் குடாநாட்டில் இரண்டரை லட்சம் பனம் விதைகள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தப் பனம் விதைகள் நடுவதற்குரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் பனம் விதைகள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-4)

## நாளை

வைகாசி 12
சனிக்கிழமை
திதி: சதுர்த்தி
பின்னிரவு 2.17 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
முற்பகல் 9.43 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம் : 8.52 - 10.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மற்றவர்கள் உங்களை எப்படி நடத்தவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அது போலவே நீங்களும் மற்றவர்களை நடத்துங்கள்.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

அண்ணே! நில்லுங்கோ, எங்கே அவசரமாகப் போறியள்? அந்தப் பக்கத்தில கண்ணிவெடி அபாயம் இருக்கும் என்றுதான் இவையை மறித்து வைத்து ஆபத்தை விளங்கப்படுத்திக் கொண்டிருக்கிறேன். - உந்தப் பக்கம் போனால் உயிரோட திரும்பி வருவது கூட சந்தேகமாகிப் போகலாம்...!



# கணித, விஞ்ஞான பயிற்சி ஆசிரியர்கள் பட்டப்படிப்பை எங்கு மேற்கொள்வது?

இலங்கையில் 1985 காலப்பகுதியில் கல்விக் கல்லூரிகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் தமிழ் மாணவர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையிலேயே பலகாலம் இருந்தது. எனினும் 1993 காலப்பகுதியில் வவுனியாவிலும் 1995 காலப்பகுதியில் மட்டக்களப்பிலும் சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திலும் கல்வியியற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இன்று வவுனியா, மட்டக்களப்பு




கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் திறமையாகக் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் தமது கல்வியைத் தொடரும் காலத்தில் கிளாலியூடாகத் தமது உயிரைப் பணயம் வைத்து கடற் படையினரின் துப்பாக்கிச் சன்னம் ஊடே பயணித்து தமது கல்வியை பல இன்னல்களின் மத்தியில் பூர்த்தி செய்து கற்பித்தலில் தேசிய டிப்புளோமா பட்டம் பெற்று இன்று ஆசிரியர்களாக உள்ளனர்.

இலங்கையிலேயே கல்விக்கு பெயர்போன யாழ்.குடாநாட்டு ஆசிரியர்களான இவர்கள் தமது கல்வித் தரத்தையும் தொழில் வாண்மையையும் விருத்தி செய்ய மிக்க ஆர்வமுடையவர்களாகவே உள்ளனர். மேலும் இவர்கள் பட்டதாரிப் பட்டம் ஒன்றைப் பெறுவதன் ஊடாக இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் 1 இல் இருந்து வகுப்பு 2 தரம் 11 இற்கு பதவி உயர்வையும் பெறும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஆரம்பநெறி, ஆங்கிலம், நடனம், சங்கீதம் போன்ற பல்வேறு பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்கள் தத்தமது துறையிலேயே யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடியதாக உள்ள போதும் கணித, விஞ்ஞான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தத்தமது துறைகளில் பட்டப்படிப்பை யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. அதாவது ஆர்வம் இருந்தும் அவர்கள் தமது துறையில பட்டம் ஒன்றைப் பெறமுடியாத இக்கட்டான சூழ்நிலையே இங்கு உள்ளது. ஆனால் இவர்களில் ஒரு சிலர் கலைப்பட்டதாரியாகக் கூடியதாக உள்ள போதும் இக்கலைமாணிப் பட்டமானது அவர்களுக்கு சம்பள ஏற்றத்தை மாத்திரம் பெற்றுக்கொடுக்கும் ஒன்றாகவே உள்ளது. மாறாக தொழில் விருத்தியையும் பெற்றுத்தரும் ஒன்றாக இருக்கவில்லை. எனவே இவர்கள் தமது துறையில் பட்டம் பெறும் வாய்ப்பு யாழ்.குடாநாட்டில் கிடைக்குமா?

இன்று தென்னிலங்கைப் பகுதிகளில் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவனம் போன்றவை விஞ்ஞான, கணிதத்துறைகளில் விஞ்ஞானமாணி, கல்விமாணி (விஞ்ஞானம்) போன்ற பல்வேறு கற்கை நெறிகளை மேற்கொள்கின்றன. தென்னிலங்கையில் ஆசிரியர்கள் அல்லாத பலரும் இப்பட்டங்களைப் பெற்றிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ள போதும் யாழ்.குடாநாட்டில் [illegible]ர்களுக்கே போர்ச் சூழல் [illegible]ல்வேறு நொண்டிச் சாட்டுக்கள் கூறப்பட்டு இவ்வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் யாழ் பிராந்தியக்கிளையினூடாக விஞ்ஞானத்தில் கல்விமாணி பாடநெறியை ஆரம்பிப்பதற்கு மேற்கொள் [illegible] பல முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் உள்ளது. எனவே யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு மேற்கூறிய நிறுவனங்கள் கல்வி வாய்ப்பை மறுப்பதனூடு அவர்களின் உயர்ச்சியையும் மழுங்கடிக்கின்றன. இவ்வாறு தமது கல்விப் பசியைப் போக்க ஏங்கித்தவிக்கும் இவர்கள் எங்கே போவது? தென்னிலங்கை செல்வதா? அவ்வாறு செல்வதானாலும் தென்னிலங்கையில் இவாகள் பல பாதுகாப்பு, சுயகௌரவப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதோடு தமது குடும்பங்களை விட்டுப் பிரிந்தே இருக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையும் ஏற்படும். மேலும் பல பொருளாதார கஷ்டங்களையும் போக்குவரத்து இடர்பாடுகளையும் சந்திக்க வேண்டியுள்ளவர்களாகவே உள்ளனர். எனவே இவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பை இங்கு எந்த நிறுவனமும் வழங்க முடியாதா?

தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு கல்விமாணிப் பாடநெறி ஒன்று ஆரம்பிக்க உள்ளதாக அறிய முடிகிறது. இந்த வகையிலே கற்றலிலும் கற்பித்தலிலும் முன்னேறத் துடிக்கும் இந்த இளம்ஆசிரியர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகம் இவ்வாறான வாய்ப்பு ஒன்றை வழங்குமா? ★

**கல்விக் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்**

# சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம் மார்க்கண்டு சுவாமிகளின் உள்ளடக்கம்

**கைதடி மார்க்கண்டு சுவாமிகள் சமாதியடைந்த தினம் நேற்றுமுன்தினம் வைகாசி மாத கார்த்திகை நட்சத்திரத்தில் ஆகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை இன்று பிரசுரமாகிறது.**

ஈழநாடு செய்த தவப்பயனாக இருபதாம் நூற்றாண்டில் பல சித்தர்களும் யோகிகளும் யாழ்ப்பாணத்தில் அவதரித்தார்கள். அவர்களில் யோகர் சுவாமிகள் எங்கள் குருநாதரான யோகர் சுவாமிகள் மக்களோடு மக்களாக வாழ்ந்து தமிழர், சிங்களவர், ஆங்கிலேயர் என பலதரப்பட்டவர்கள் வாழ வழிகாட்டி அருள்புரிந்தார். யோகர் சுவாமிகளின் ஆளுகைக்கு உட்பட்டவர்களுள் முதன்மைச் சீடராக வாழ்ந்து வழிகாட்டியவர் கைதடியூர் மார்க்கண்டு சுவாமிகள். அவர் வேடம் ஒன்றும் விரும்பாதவர். தாள மேளமில்லாமல் வளர்ந்த சிவ தொண்டர்.

மார்க்கண்டர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரான்பற்று எனும் சிற்றூரில் 1899ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் சுன்னாகம் சந்தையில் வியாபாரம் செய்யும் ஒரு சிறு வியாபாரியாவார். சிறுவயதிலேயே அவர் மனம் ஆன்மீகத்தை நாடியதால் அவர் கூடுதலாக தனது நேரத்தை பக்கத்தில் உள்ள முருகமூர்த்தி ஆலயத்திலேயே சிவதொண்டு செய்வதிலும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதிலும் கழித்தார்கள். சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர். "சீனியர் கேம்பிரிச்" சோதனையில் சித்தியடைந்து தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையை ஏற்றார். மார்க்கண்டர் தியத்தலாவையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தான் அவர் யோக முனியின் அருட்பார்வைக்கு இலக்கானார்.

## ஞானக்கதிர்

வெளி மாதிரியொன்றும் செய்யாத இளைஞர் மார்க்கண்டருக்கு ஆத்ம தாகத்தை ஆக்கிவிட சித்தம் வைத்தார் எங்கள் குருநாதன். சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம் என்பவை மார்க்கண்டரிடம் பொருந்தியிருந்ததைக் கண்ட யோகநாதர் "ஆரும் அறியாமல் அந்தரங்கமாக" அவருக்கு அருளைச் சொரியச் சித்தமானார். நில அளவைத் திணைக்களத்தில் வேலை செய்த மார்க்கண்டருக்கு எங்கள் குருநாதன் "வடதிசை காட்டும் கருவியைப் போல் இரு" என்று கூற மார்க்கண்டரும் தமது மனத்தை எப்பொழுதும் பரப்பிரம்மத்தை நோக்கிய வண்ணம் சாதனை புரியத் தொடங்கினார். "நில அளவை செய்கிறதற்கு பாதைகளை வெட்டுகின்றது போல எங்கள் பாதைகளில் வரும் தடைகளை நாங்களே வெட்டி நீக்க வேண்டும்" எங்களை நாங்களே திருத்த வேண்டும். மற்றவர்களின் உதவியைப் பார்த்திருக்கக் கூடாது என்பன போன்ற உபதேசங்கள் உபதேசிக்கப்பட்டன.

• மார்க்கண்டரும் உலகத்தை ஒரு கையிலும் இறைவனை ஒரு கையிலுமாகப் பிடித்தபடி முன்னேறிச் சென்றார். யோக முனியும் மலை நாட்டுக்



குச் செல்லும் போதெல்லாம் மார்க்கண்டருக்கு உபதேசங்கள் செய்த வண்ணம் இருந்தார்.

• மார்க்கண்டர் தியத்தலாவையிலிருந்து மாற்றம் பெற்று கொழும்பில் சிலகாலம் தொழில் புரிந்தார். சன நெருக்கடி மிக்க கொழும்பு மாநகரில் சைவ சித்தாந்த வகுப்புக்களுக்கு சென்று வந்தபோது படிக்கப் படிக்க மனம் விருத்தியடைந்ததைக் கண்டார். இதனால் மனம் ஒடுங்கிய இடமே ஆறுதலைத் தரும் என்னும் உண்மையினை உணரலானார். குருநாதரும் "சனமருள் சாத்திரமருள்" என எச்சரித்து இவற்றை உணரவைத்தார்.

ஐம்பதாவது வயதில் மார்க்கண்டர் உத்தியோகத்துக்கு முற்றுப் புள்ளி வைததுவிட்டு கொழும்பிலிருந்து நேரே கொழும்புத்துறையில் யோகநாதன் குடிகொண்டிருந்த கொட்டிலை நோக்கி ஓடிவந்து நேராக யோகர் சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து இனி நீயே கதியென சரணடைந்தார்.

குருநாதன் அவரை அடைக்கலமாக ஏற்று வண்ணார்பண்ணையில் இருக்கும் ஒரு வீட்டில் தங்கச் செய்தார். தெய்வ சித்தத்தை ஒருவரும் அறியார். அது மறைவாகவே இருக்கும். ஆனால் மகான்களுக்கு அது தெளிவாகத் தெரியும். மார்க்கண்டரை அமர்த்தும் இடம் யோகர் சுவாமிகளால் எப்பவோ தேர்ந்தெடுக்கப்பட்டது. பல வருடங்களுக்கு முன்னமே யோக முனியின் சித்தத்தில் தெளிவாகத் தெரிந்தது.

1938ஆம் ஆண்டு யோகர் சுவாமிகள் கைதடிக்குச் சென்ற போது விஸ்வலிங்கம் ஆசிரியரின் தகப்பன் சின்னத்தம்பி சுவாமிகள் தனியாகத்தங்கக் கூடிய குடிசை ஒன்று இவ்வீட்டின் முன்பக்கத்தில் இருக்கின்றது என்று கூறினார். அதற்கு யோகர்சுவாமிகள் "பொறுத்திரு அதற்கு இன்னும் சில காலம் இருக்கின்றது" என்று கூறினார்.

1940 ஆம் ஆண்டு மகாசிவராத்திரியன்று நாவற்குழி புகையிரத நிலையத்தில் நின்ற யோகர்சுவாமிகள் திடீரெனக் கைதடிக்குப் போக வேண்டுமெனக் கூறினார். கைதடியில் உள்ள குடிசையை துரிதமாக ஆயத்தம் செய்து பால்காய்ச்சுமாறு விசுவலிங்கம் ஆசிரியருக்குப் பணித்தார். அதன்படி விசுவலிங்கமும் பால்காய்ச்சி நாவற்குழி புகையிரத நிலையத்திலிந்த சுவாமிகளுக்கு கொண்டு வந்து கொடுத்தார். சுவாமிகளும் தாமும் அதில சிறிது பருகி தம்மை வணங்க வந்த அடியவர்களுக்கும் வழங்கினார். சுவாமிகள் கைதடியிலிருந்த அக்கொட்டிலிற்கு விளக்கேற்றி திருமுறைகள் நற்சிந்தனை முதலியவற்றை படிக்குமாறு கூறினார்.

ஆசிரியர் விசுவலிங்கம் குறைநதது ஒரு கிழமைக்கு ஒருக்காலாவது கொழும்புத்துறை சென்று சுவாமிகளைச் தரிசிப்பார். 1950 ஆம் ஆண்டு கொழும்புத்துறை சென்ற விசுவலிங்கத்தை யோகர் சுவாமிகள் அங்கு தங்குமாறு பணித்தார். அடுத்த நாள் காலை "விசுவலிங்கம் உனக்கு இனிமேல் கைதடியில் இருக்க நல்ல ஒரு சினேகிதனைத் தருகிறேன் அவன் போகும் போது உங்களுக்கு எல்லாம் தந்துவிட்டுப்போவான் நான் நாளை கைதடிக்கு அவனையும் அழைத்து வருவேன்" என சுவாமிகள் கூறினார். விசுவலிங்கமும் உடனே கைதடிக்குச் சென்று சுவாமிகளின் வரவை எதிர்பார்த்த வண்ணம் இருந்தார்.

யோகர்சுவாமிகள் தாம் சொன்னவரோடு கார் ஒன்றிலே கைதடிக்கு வந்தார். சுவாமிகள் வரும் போது கட்டில், மெத்தை, உணவு தயாரிக்கும் எண்ணை, அடுப்பு போன்றவற்றை எடுத்துவந்திருந்தார். இன்று நல்ல .நாள் என்று கூறிய யோகர் சுவாமிகள் எல்லோருக்கும் தேநர் தயாரித்து வழங்குமாறு சீடர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் அன்று மத்தியானம் இந்த ஆச்சிரமத்திலே ஒரு கறியும் ஒரு சோறும் சமைத்து குருவும் சீடனும் உண்டபின் யோகர் சுவாமிகள் கொழும்புத்துறை ஏகினார்.

மார்க்கண்டரும் இந்த ஆச்சிரமத்தில் இருந்து உயர் ஞான சாதனைகளில் ஈடுபட்டார். யோககுருநாதனும் அடிக்கடி இக்கொட்டிலிற்கு வந்து நற்சிந்தனைகளை புகட்டினார். மார்க்கண்டரும் ஆசான் அருளால் ஆசானானார். எல்லோரும் அவரை மார்க்[கண்டு] சுவாமிகள் என அன்பாக அழைத்தனர். மார்க்கண்டு சுவாமிகளுக்கும் தலயாத்திரை, ஆலய வழிபாடு போன்ற கிரியையொன்றும் வேண்டியிருக்கவில்லை. ஒரு நாள் யோகசுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளின் உடம்பைக் காட்டி "இது தான் நல்லூர். இதுதான் தேர்" என்று அருளினார் எனினும் குருநாதனின் கட்டளைக்கிணங்க மார்க்கண்டு சுவாமிகள் நல்லூருக்கு ஓரிரு தடவையே சென்றுள்ளார்.

## நல்லூரான்

நற்சிந்தனைப் பாக்கள் மார்க்கண்டு சுவாமிகள் மனத்தில் புனிதஏடாக விரிந்துகிடந்தன. சுவாமியின் அருள் வாசகங்கள் அவர் மனதில் நன்கு பதிந்திருந்தன. ஆரம்ப நாள்களில் மார்க்கண்டு சுவாமிகள் பிராணனை அடக்கி ஆளும் ஆசையில் பிராணாயாமப் பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால் யோக சுவாமிகள் "மூச்சைப் பிடித்து பிராணாயாமம் செய்யத் தேவையில்லை". "சிவத்தியானம் செய்ய இவை எல்லாம் வரும்". "சும்மா இருக்க சுகம் உதயமாகும்". "சர்வம் பிரம்மமயம் என்றுணர்". "குண்டலினியின் எழுச்சியைப் பற்றியும் சிரத்தை கொள்ளத் தேவையில்லை" என்று மார்க்கண்டு சுவாமிகளுக்கு உபதேசித்தார்.

மார்க்கண்டு சுவாமிகளும் கூடுதலாக சிவத்தியானத்தில் இருந்தார். சில வேளைகளில் அவரின் தலை மேல் காகம் குருவி கூட வந்திருக்கும். அப்படிர் தன்னை மறந்த நிலையில் இருந்தார். சுவாமிகள் ஒரு நாள் யோக சுவாமிகள் "தியானம் செய்தால் அதுவும் வேலை. சுமமா பத்து நிமிடம் இருக்கப் பழகு" என அருளி ஏகாந்த மோன நிலையில் இருக்க வழிவகுத்தார்.

சோல்பரிப்பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சந்த சுவாமியை) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்க வைத்து அவருக்கு அருளுரைகள் வழங்குமாறு யோகர் சுவாமிகள் பணித்தார். சோல்பரிப்பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப்போல அன்பு செலுத்தி எதுவித வசதிகளையும் எதிர்பாராது சாதனைகளில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவி சுப்பிரமுனிய சுவாமி, ஜெர்மன்சுவாமி, ஆஸ்திரேலிய பன்றிக்குட்டி சுவாமிகள் உட்பட பல சமயத்தையும் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற வந்தார்கள்.

யோக குருநாதர் சமாதி அடைந்த பின்னரே அன்பர்களை தனக்கு முன் கற்பூரம் கொழுத்தி வழிபட சுவாமி அனுமதித்தார். வழிபடும் அனபர்கட்கு அவரவர் தேவைக்கேற்ப உறுதி செய்யும் ஆறுதலையும் அளிக்கவல்ல திருமுறைப் பாடல்களையும் நற்சிந்தனைப் பாக்களையும் சொரிவதன்றி தன் வாக்காக எதனையும் சொல்லமாட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள் தம் இறுதி நாள்களில் குளிப்பு முழுக்கு முதலியவற்றைக் கை விட்டதோடு உணவையும் வெகுவாகச் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சியடைந்து காணப்பட்டதால் யோகு பசுபதி போன்ற வைத்தியர்கள் மார்க்கண்டு சுவாமிகளைப் பார்வையிட வந்தபோது சுவாமிகள் தமக்கு எதுவித வருத்தமுமில்லை என்று சொல்லி விட்டார். ஆனால் சுவாமிகளின் உடம்புக்கு அந்திம காலம் நெருங்கிவிட்டது என்பதை அன்பர்கள் உணர்ந்தார்கள். ஆனால் சுவாமிகளோ சும்மாவிருந்து இரத்தாசி வருடம் வைகாசி 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் யோககுருநாதன் திருவடிகளைப் பற்றினார். ★

### தென்மராட்சியில் இருந்து

# இடம்பெயர்ந்த பொதுமக்கள் வீடுகளைப் பார்க்க முண்டியடிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்தோர் தத்தமது பகுதிகளுக்குச் சென்று தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு அனுமதிப்பது குறித்து படையினர் விடுத்த அறிவித்தலை அடுத்து, கடந்த செவ்வாயன்று யாக்கரு, மீசாலை, அல்லாரை, கைதடி ஆகிய சிவில் அலுவல்கள் அலுவலகங்களுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சென்றிருந்தனர்.

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு ஆகிய பிரிவுகளுக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு பதிவு செய்த மக்கள் அந்தந்த அலுவலகங்களில் வைத்து தினசரி பாஸ் வழங்கப்பட்டு, வாகனங்களில் ஏற்றப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் சங்கத்தானை கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியைச் சேர்ந்தோர் தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அழைத்துச் செல்லப்பட்டோர் தேங்காய், பலாப்பழம் தவிர்ந்த ஏனைய பொருள்களை எடுத்து வரக் கூடாது என அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

# யாழ். தொழில் நுட்ப நிறுவனத்தில் பொறியியல் பிரிவை ஆரம்பிக்குக!

## பணிப்பாளரிடம் மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

யாழ். தொழில்நுட்ப நிறுவனத்தில் பொறியியல் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும்— இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி நிறுவனத்துக்குக் கொழும்பிலிருந்து வருகை தந்த தொழில்நுட்ப நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தகவல் தொழில் நுட்பப் பணிப்பாளர் எம். ஜீ. எஸ். சகாயம் யாழ்.தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நேரில் விஜயம் செய்து அங்குள்ள விரிவுரையாளர்கள், மாணவர்கள் போன்றோரைச் சந்தித்து நிறுவனத்தின் குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன் செயற்பாடுகளையும் அவதானித்தார்.

இறுதியில் மாணவர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே மாணவர்கள் சார்பில் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தகவல் தொழில் நுட்பக் கல்வி நெறியையும் இந்த நிறுவனத்தில் ஆரம்பித்து, யாழ்ப்பாண மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்த வேண்டும் என்றும் பணிப்பாளரிடம் கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர் தான் கொழும்பு திரும்பியதும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். (க-5)

# யாழ். கல்வி வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகள்

## 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். கல்வி வலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

7ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வைத்திஸ்வராக் கல்லூரியிலும்—

8ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறும்.

இதேவேளை கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கோட்ட மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் முதலாம், 2 ஆம் திகதிகளிலும்—

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் கல்விக் கோட்டங்களின் போட்டிகள் அடுத்த மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன.

கோட்ட மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் மட்டுமே வலய மட்டப் போட்டிகளில் பங்கு கொள்ளலாம் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

## சுங்க அதிகாரி படுகொலை:

# இந்தியாவிலுள்ள சந்தேகநபரை கைதுசெய்ய 'இன்ரபோல்' உதவி

கொழும்பில் அண்மையில் படுகொலை செய்யப்பட்ட சுங்க அதிகாரியான சுஜித் பிரசன்ன பெரேரா என்பவரின் கொலையுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் அநுரவீரசன்ச என்பவரைக் கைது செய்வதற்கு இலங்கை அரசு 'இன்ரபோலின்' உதவியை நாடியுள்ளது.

படகுமூலம் இந்தியாவுக்குச் தப்பிச்சென்றிருக்கலாம்எனக் கருதப்படும். இவரைப் பலர் அங்கு கண்டதாகத் தெரிவித்துள்ளனர். சந்தேக நபரைக் கைதுசெய்ய பிரான்ஸ் நாட்டிலுள்ள 'இன்ரபோலின்' உதவியை தற்போது பொலிஸார் நாடியுள்ளனர்.

அத்துடன் பொலிஸாரும், சி.ஐ.டியினரும் இது தொடர்பாக 3 சுங்க அதிகாரிகளை விசாரணை செய்து வருகின்றனர். (க-10)

# 'சிஹல உறுமய' எதிர்க்கும்

கொழும்பு, மே 25

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மஹிபால ஹேரத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை 'சிஹல உறுமய' கட்சி எதிர்க்கும். இதனை அக் கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

ஐ. தே. கட்சியினரே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளனர். மாவனல்லைச் சம்பவங்களுக்கு பின்னணியில் செயற்பட்டவர் அமைச்சர் மஹிபால ஹேரத் என்பதே அவர்களின் குற்றச்சாட்டு.

மாவனல்லையில் காடையர்கள் கப்பம் கேட்டதாலேயே பிரச்சினை ஏற்பட்டது. இனக்கலவரமல்ல, இச் சம்பவங்களுக்கு அமைச்சர் நேரடியாகச் சம்பந்தப்படவுமில்லை எனவே 'சிஹல உறுமய' எதிர்க்கிறது என கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார். (க-186)

# வடமராட்சியில் ஒரேஒரு மாலைநேர பாடசாலை

வடமராட்சி, மே 25

வடமராட்சி கல்வி வலயத்தில் தென்மராட்சியைச் சேர்ந்த ஒரே ஒரு பாடசாலை மட்டுமே மாலை நேரப்பாடசாலையாக தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது.

முன்னர் இவ்வலயத்தில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 6 பாடசாலைகள் மாலை நேரப் பாடசாலைகளாக இயங்கி வந்தன. (க-173)

# சுகாதார வாரத்தில் மாணவர் இடையே போட்டிகள்

வலிகாமம் தெற்கு, 25

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சுகாதார வாழ்வு நிகழ்வுக்கான போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கட்டுரைப் போட்டிக் க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்குத் தனியாகவும், உயர் தர மாணவர்களுக்குத் தனியாகவும் நடைபெறும்.

கவிதை, சுவரொட்டிப் போட்டிகள் இருதரங்களுக்கும்பொதுவாக நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்குச் சுகாதாரப் பகுதியினரால் சான்றிதழ்கள் வழங்கப்படும். (க-152)

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் வளிமண்டலஆராய்ச்சி நிலையம்

யாழ்ப்பாணம், மே 25

வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்தில் மீண்டும் வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயற்படாதிருந்த இந்த நிலையம் திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் வளிமண்டல திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தினால் காற்றின் வேகம், வளிமண்டல ஈரப்பதன், நிலக்கீழ் வெப்பநிலை, சூரிய கதிர் வீச்சு போன்றவற்றின் தரவுகள் அளவிடப்படவுள்ளன. (க-5)

# மக்கள் வங்கி 'ஜயசிறீ' பரிசு; 43 ரி.விக்கள் கையளிப்பு

மக்கள் வங்கியின் ஜயசிறீ பரிசுத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இதுவரையும் 43 தொலைக்காட்சிப் பெட்டிகள் பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மக்கள்வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் 32 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன. இதற்காக 14 தொலைக்காட்சிப் பெட்டிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மிகுதி 18 தொலைக்காட்சிப் பெட்டிகளையும் கப்பல் மூலம் எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் நடைமுறைக்கணக்கில் குறைந்தது 5 ஆயிரம் ரூபாவையும் சேமிப்புக் கணக்கில் 10 ஆயிரம் ரூபாவையும் நிலுவையாக வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் மக்கள் வங்கி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-5)

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் முதலாம் வருடம் உட்பட அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் வரலாற்றுத்துறை மண்டபத்தில் நடைபெறுகிறது மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி வரலாற்றுக்கழகத்தினர்கேட்டுள்ளனர். (ஓ)

# திருக்கோவிலில் குடும்பஸ்தர் படையினரால் சுட்டுக் கொலை

திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த செவ்வாய்க்ழமை இரவு 9.30 மணியளவில் திருக்கோவிலில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த தர்மரெட்ணம் அற்புதராஜா (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் விசேட அதிரடிப் படையினரால் உகந்தைப் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட விடுதலைப்புலி இயக்க உறுப்பினர் ஒருவருடைய மரண வீட்டில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கிரியைகளில் கலந்து கொண்டு விட்டு வீட்டுக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட போதே வீதி கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் இரு பிள்ளைகளின் தந்தை, இவருடைய மனைவி மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் புரிந்து வருகின்றார்.

இவருடைய சடலம் திருக்கோவில் விசேட அதிரடிப் படை முகாமில் வைக்கப்பட்டிருந்து புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவிலேயே அக்கரைப்பற்று வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது. (க)

# இளைஞருக்கு எரி காயம்

'பிளாஸ்ரிக்' கொள்கலனுடன் எரியும் விளக்குக்கு மண்ணெண்ணெய்நிரப்பிய இளைஞர் அது வெடித்துச் சிதறியதால் எரிகாயங்களுக்கு உள்ளாகி படுகாயமடைந்தார்.

அச்சுவேலியில் வெதுப்பகம் ஒன்றில் கடமைபுரியும் இளைஞரான சுரேஷ்குமார் என்பவரே எண்ணெய் விடும் போது கொள்கலன் வெடித்துச் சிதறி எரிகாயங்களுக்கு உள்ளாகியவர் ஆவார்.

இந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (க-11)

# உள்நோயாளர்பிரிவு விரைவில்இயங்கும்

கொக்குவில் குளப்பிட்டியில் இயங்கி வரும் கைதடி சித்த போதனா வைத்திய சாலையில் உள்நோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

கைதடியிலிருந்து இடம்பெயர்ந்த பின்னர் வெளிநோயாளர் பிரிவுடன் மட்டும் இந்த வைத்தியசாலை இயங்கிவந்தது தெரிந்ததே. (க-5)


இணுவில்

பரராசசேகரப்பிள்ளையார்

## தீர்த்த மகோற்சவம்

நாளை (26—05—2001) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நீராடி, திர்த்த மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகள் வீற்றிருக்க நாதஸ்வர, தவில் வித்துவான்களின் இசை மழையில் பரராசசேகரப்பிள்ளையாருக்கு பத்ம தடாக புஸ்கரணியில் தீர்த்தாபிஷேகம் நடைபெறும்.

முக்கிய குறிப்பு:- பிற்பகல் 3.00 மணிக்குத் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

★ காசித் தீர்த்தமும் சேர்த்துக் கொள்ளப்படும்.

- தீர்த்தத் திருவிழா உபயகாரர்.

(88143)



## துயர் பகிர்வு

உயிருக்கு உயிரான தமிழை
பல வருடங்களாக எமக்குப் போதித்து
தமிழின் அருமையை ஆழப்பதித்து
எம்மை உருவாக்கிய ஆசான்

அமரர் ம. விக்ரர்
''யாழ் ஜெயம்''

அவர்களின் மறு உலகப் பயணம்
எம்மை தாங்கொண்ணா
வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

எம் ஆசானின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், மாணவர்கள்,
புனித மடுத்தீனார் குருமடம்.

(88162)



வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச செயலக கலாசாரப் பேரவையினரின்

## கலைநிகழ்வு ஒத்திவைப்பு

எதிர்வரும் 27—05—2001 ஞாயிற்றுக்கிழமை யா/விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்குப்
பிரதேச செயலக கலாசாரப் பேரவை.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

(88159)

## வவுனியாவில் புளொட் மீதான தாக்கு:

# ரெலோ மீது சந்தேகப்படுவது பெரும் வேதனையளிக்கிறது

## அடைக்கலநாதன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 25

வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள முதலியார் குளத்தில் அண்மையில் புளொட் உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் எமக்கும். எவ்வித தொடர்புமில்லை. எம்மீது சந்தேகப்படுவது எமக்குப்பெரும் வேதனையளிக்கின்றது.

— இவ்வாறு ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்களின் ஆணைப்படி செயற்படுவதும் அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அத்தனை கொடுமைகளையும் தட்டிக்கேட்பதும் அவர்களின் துயரங்களில் பங்கெடுப்பதுமே எமது கொள்கைகளாக இருக்கின்றன.

அவ்வாறு இருக்கும் போது எமது தமிழ்க் கட்சிகளுடன் முரண்பாடு கொண்டவர்களாக நாம் இருப்பது கொண்ட கொள்கைக்கு உகந்ததல்ல. அப்படியான செயல்களில் எமது கட்சி ஈடுபடாது என்பதுதான் உண்மை.

எம்மீது அவதூறு சுமத்தப்பட்டிருக்கும் முதலியார்குளச் சம்பவத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் இருப்பதில் எமது உறுப்பினர்கள் நிதானத்துடனேயே செயற்படுகிறார்கள். சில உதிரிகளின் செயற்பாடுகளே கட்சிகளிடையே முரண்பாடுகள் வளர்வதற்குக் காரணமாக அமைகின்றன.

இவ்வாறான செயல்களைச் செய்வோர் மீது சட்டம்தனது கடமையைச் செய்ய உறுதுணை வழங்குவோம். தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வும் அதற்கான அடித்தளத்தைக் கொடுப்பதும்தான் எமது இன்றைய இலட்சியமாக இருக்கின்றது. அதில் நாம் திடமாகவும் இருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## உச்ச விலையில் வெங்காயம்

வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. சந்தைகளில் வெங்காயம் கிலோ 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

வெங்காயம் அறுவடை செய்யப்பட்ட காலப் பகுதியில் 40 ரூபாவரை விற்பனை செய்யப்பட்ட போதிலும் மீண்டும் விலை அதிகரித்துள்ளது.

விதை வெங்காயம் சாதாரணமாக பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதுடன் 50 கிலோ 3 ஆயிரம் ரூபா வரை விலை போகிறது. (ஒ-11)

# தென்மராட்சியில் திருடப்படும் பொருள்கள் மலிவு விலையில்!

தென்மராட்சிப் பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் வீட்டுத் தளபாடங்கள் ஆடம்பர பாவனைப் பொருள்கள் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளில் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கதிரை வகைகள் 500 ரூபாவுக்கு குறைவான விலையிலும் ஆடம்பரமான வீட்டுத் தளபாடங்கள் 300 ரூபாவுக்கு குறைவான விலையிலும் மின்சார அடுப்புகள் மற்றும் உபகரணங்கள் 500 ரூபாவுக்கும் குறைவான விலையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

பயன்படுத்தப்பட்ட பொருள்கள் பயன்படுத்தப்படாத புதிய பொருள்கள் உட்பட பல்வேறு தரத்திலான பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

தென்மராட்சிப் பகுதி வீடுகளிலும் வியாபார நிலையங்களிலும் திருடப்பட்ட பொருள்களே இவ்வாறு மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. (க-11)


# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12 - 02 - 1925

விண்ணில் 10 - 06 - 1986

## அமரர் தம்பு கதிரவேலு

(இளைப்பாறிய அதிபர்,
கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

திதி: 25 - 05 - 2001

அன்பின் பிறப்பிடமே!
அறிவின் திருவுருவே! நீங்கள்
எங்களைப் பிரிந்து சென்று
பதினைந்து ஆண்டுகள் சென்றதையா!

எத்தனை எத்தனை ஆண்டுகள் ஓடிப்போனாலும்
எப்போதும் உங்கள் நினைவு நீங்காது நிலைத்திருக்கும்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருவத்தம்மை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(87819)


# சாவகச்சேரி நகரில் கடைகளைத் திருத்துவதற்குப் படையினர் அனுமதி

தென்மராட்சி, மே 25

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான கடைக் கட்டடங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையக் கட்டடங்களைத் திருத்துவதற்குப் படையினர் அனுமதி வழங்கி உள்ளனர். கட்டடத் திருத்த வேலைக்கென 28 ஆம் திகதி தொடக்கம் வர்த்தகர்கள் அங்கு செல்வதற்கும் நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று கொடிகாமம் சிவில் அலுவல்கள் அலுவலகத்தில் நடைபெற்ற சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களைத் திருத்துவதற்கான விண்ணப்பங்களை கடையை நடத்தி வந்தவர் கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டுமெனவும்—

திருத்த வேலைக்கான பொருள்களை வாகனங்களில் கொண்டுசெல்ல வேண்டுமாயின் வாகனத்தின் இலக்கம், அழைத்துச் செல்லப்படவுள்ளவர்களின் அடையாள அட்டைகளின் இலக்கங்கள் ஆகிய விபரங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் —

அங்கிருந்து திரும்பும்போது வாகனங்களில் எந்தவொரு பொருள்களும் ஏற்றிவரக் கூடாது எனவும் —

அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-117)

## தியாகிகள் தினத்தை முன்னிட்டு:

# எவரிடம் இருந்தும் வற்புறுத்தி நிதி உதவிகள் பெறவில்லை

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி அறிக்கை

யாழ்ப்பாணம், மே 25

தியாகிகள் தினத்திற்காக எவரிடம் இருந்தும் வற்புறுத்தி நிதி உதவிகள் பெறப்படவில்லை. அவரவர் விருப்பத்திற்கேற்பவே நிதி உதவிகளை வழங்குகின்றனர்.

— இவ்வாறு ஈ.பி.ஆர்.எல். எவ். சுரேஷ் அணியினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது 1993 ஆம் ஆண்டிலிருந்து எமது கட்சியின் ஸ்தாபகரான தோழர்பத்மநாபாவும், அவருடன் இணைந்து இன்னும் பன்னிரு தோழர்களும் கொலை செய்யப்பட்ட தினத்தை தியாகிகள் தினமாக அனுஷ்டித்து வருகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளிகளுக்கு மாத்திரமாகவல்லாமல், எமது விடுதலைப் போராட்டத்தில் மரணித்து விட்ட போராளிகள், பொது மக்கள் அனைவரையும் நினைவு கூர்வதுவும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதும் எமது தலையாய கடமையாகும். தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, புளொட் போன்ற அமைப்புகள் இவ்வாறான அஞ்சலி நிகழ்ச்சிகளை பல வருடங்களாக நடத்தி வருகின்றனர். எல்லோருமாக இணைந்து விடுதலைப் போரில் மரணித்தோரை நினைவுகூர ஒரு தினத்தை பிரகடனப்படுத்தும்வரை ஒவ்வொரு அமைப்பும் இவ்வாறான அஞ்சலி விழாக்களை நடத்துவது நியாயமானதே.

இதன் பிரகாரம் ஜூன் 19 ஆம் திகதியை தியாகிகள் தினமாகப் பிரகடனம் செய்து எமது அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம். இரத்ததானம், சிரமதானம், விளையாட்டுப் போட்டிகள், கூட்டங்கள் போன்ற பல நிகழ்வுகளை நடத்தி எம்மாலான சேவைகளையும் அன்றைய தினத்தில் செய்து வருகின்றோம். இதனடிப்படையில்தான் இம்முறையும் மன்னாரில் இத்தினத்தைச் சிறப்பாகச் செய்ய ஏற்பாடு செய்து வருகின்றோம்.

இதற்காக விரும்பியோரை உதவி செய்யும்படி கோரி, அவ்வாறாக உதவிகளையும் பெற்று வருகின்றோம். அவ்வுதவி ஐந்து ரூபாயாகவும் இருக்கலாம்; இல்லையேல் ஐம்பது ரூபாயாகவும் இருக்கலாம். இது அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததே தவிர நாம் யாரையும் வற்புறுத்தவில்லை. அவ்வாறு நாம் வற்புறுத்திபதாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் அதனை வெட்ட வெளிச்சமாகக் கூறலாம் என்பதுடன் தகுந்த இடங்களில் அது தொடர்பாக முறைப்பாடும் செய்யலாம்.

எமது கட்சியின் செயலாளர் நாயகமாக தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பொறுப்பேற்ற காலமான 1990 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நாம் அரசியல் ரீதியாகவும் சரி ஏனைய வகையிலும் சரி மிகவும் பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து வருகின்றோம்.

ஆனால் கட்சியில் இருக்கும் ஒரு சில சுயநலமிகள் பத்து வருடம் இந்தியாவில் ஆடம்பர வாழ்வு வாழ்ந்த பெருமாளின் துணையுடன் இன்று எமது கட்சியை நாசப்படுத்தியது மட்டுமல்லாமல் முழுத் தமிழ் மக்களையுமே விற்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்துடன் இணைந்து அரசின் வருவாயைப் பெற்றுக்கொள்வதுடன் மன்னார், வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் துப்பாக்கி முனையில் கப்பமும் வசூலித்து வருகின்றனர். இக்கப்பங்களைச் சேகரித்து தமது வாழ்வை வளம்படுத்திக்கொள்வதற்காகவே பெருமாள் குழுவில் இன்னும் சிலர் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர்.

இதுமாத்திரமல்லாமல் அரசின் அடாவடித்தனங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை நியாயப்படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கைகளின் நியாயங்களைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டிலும் இவர்களும் இவர்களது தலைமையும் தீவிரமாகவுள்ளது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் கட்டுப்பாட்டுடன் இயங்கும் எம்மை விமர்சிக்க இப்படியானவர்களுக்கு எந்தவித யோக்கியதையும் கிடையாது.

உயிர் நீத்த போராளிகளின் பணிகளை முன்னெடுப்பதென்பது இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதும் அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களை மொத்த விலைக்கு விற்பதுமல்ல என்பதைப் பெருமாள் அணியினரும் அவருக்கு பக்க வாத்தியம் வாசிக்கும் குழுவினரும் புரிந்துகொண்டால் போதுமானது.

## புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், மே 25

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவ காலங்களில் ''நல்லைக் குமரன்'' நூலை வெளியிட்டு வரும் யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவுக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கள்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் போஷகராக மேயர் என். ரவிராஜும், உப போஷகராக பிரதி மேயர் செல்லன் கந்தையனும், தலைவராக மாநகர சபை ஆணையாளர் ஆர். இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவில் சபை ஊழியர்களில் 8 பேரை ஆணையாளர் சிபார்சுடன் நியமனம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பல வருட காலமாக நடைமுறையில் இருந்த சைவ சமய விவகாரக் குழுவின் யாப்பு திருத்தம் செய்யப்பட்டு சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (உ-5)

## சிரமதானம்

சுகாதார வாரத்தையொட்டி கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சியில் உள்ள சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பாடசாலை வளவுகளைத் துப்புரவு செய்தனர். (க - 117)

# 3 ஆயிரம் அ. அட்டைகள் செயலகத்துக்கு வந்தன

யாழ்ப்பாணம், மே 25

கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமைச் செயலகத்தினால் 3 ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக யாழ். செயலகம் ஊடாக அடையாள அட்டைகள் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகளே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தற்போது யாழ். செயலக ஆள்பதிவு பிரிவில் வைக்கப்பட்டுள்ள இந்த அடையாள அட்டைகள் தாம் பிரிக்கப்பட்டு பிரதேச செயலர்கள் ஊடாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களும் யாழ். செயலகத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-5)

யாழ்ப்பாணம் புங்கங்குளம்

# வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

# வருடாந்தப் பொங்கல் விழா சிறப்பிதழ்

25-05-2001

## பொங்கி அருள் சுரக்கும் புதுமை மிகுந்த அன்னை

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டிற்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள காரணமாகப் பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறு வேறு இடங்களில நடைபெற்றதும் அடியார்களின் நேர்த்திக்கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்பட்டதும் நம் பிரதேச வழக்கமாகியிருந்தது.

இந்த வகையிலே யாழ்.குடாநாட்டின் புங்கங்குளப்பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால் இந்த அம்மனின் புங்கங்குள அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இற்றைக்கு சுமார் 35 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்!

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல் [illegible] நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புகள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்கு பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல



வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகலப் புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருகப் பாவிகள் நாம் பணிந்திடுவோம்!

தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப் போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கி உள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

இந்த ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கே நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய், பிணி தோசங்கள் நீங்கிவிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குளம்பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ்நகரின் புங்கங்குளம் பகுதியிலே வில்வையடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்பெருந்தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக.

*'மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்'*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாமே!
நம்பியே கை தொழுவார்க்கு பிணி நீங்கிடுமே!!


கட்டடப் பொருள்கள், உழவு இயந்திர, லான்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
கே.வைத்திலிங்கம் கொம்பனி
38, 40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 2075

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், றேடியோ, ரீ.வி, டெக் ஆகியவற்றைப் பெறுவதற்கு உடன் நாடவேண்டிய இடம்
சிவாஸ் சென்ரர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலயங்களுக்குத் தேவையான பட்டுத் துணிகள் மற்றும் பட்டுவேட்டிகள், சாறிகள் ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்
அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

தங்க நிறமென்றால் தனி மௌசுதான் அதிலும் "சிறி நதியா"வின் நகைகளை அணிந்த பெண்ணுக்கு எவ்வளவு பெருமை
சிறி நதியா நகைமாடம்
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்
கயன் ரேட்ஸ்
95, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

புதிய முருகன் வணிக நிலையம்
(நியூ முருகன் ரேடர்ஸ்)
58P, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான அளவுகளிலும் மரங்கள் எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றுக்கொள்ளலாம் போலியற்றது! நாணயம்மிக்கது!!
அன்னை மரக்காலை
ANNAI TIMBER DEPOT
இல. 176, ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: க. முருகேந்திரன்.

அழகுக்கு அழகு செய்யும் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
அலங்கார் நகைமாளிகை
217, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் ஒரே ஸ்தாபனம்
தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்
S.THAMBIPILLAI & SON
இல. 191 (343), காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

குமார் A.P.O
5354, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி யாழ்ப்பாணம்.
T.P. - 3453

நகை உலகில் இன்று புதிய டிசைன் நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்
சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஒளிச் சுடர்விடும் பளிச்சிடும் நகைகளுக்கு
சாணுகா நகைமாடம்
198H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அவசர தேவை உணர்ந்து ஓடர்களை உடனுக்குடன் செய்து பெற்றிட
நந்தினி நகைமாடம்
218H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன மிக்ஸர் கமெரா மூலம் அதிநுட்பமான முறையில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து விழாவினை மேன்மேலும் மெருகூட்டுபவர்கள்,
பழைய, புதிய படப் பாடல்களை DISC ஒலிப்பிழையில் இருந்து நேரடியாக STEREOவில் பதிவு செய்திடவும்
DISCஇல் இருந்து DISCஇற்குப் பதிவு செய்து பெற்றிடவும்
சுப்பஸோ வீடியோ ஓடியோ & கலர் லாப்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/16826)

## துறைமுகத் தொழிலாளி காயம்

தென்மராட்சி மே25

பருத்தித்துறைக் கடலில் பொருள்களுடன் நின்ற 'சஜித்த' கப்பலிலிருந்து இறக்கிக் கொண்டிருந்த கூரைத்தகடு தவறி வீழ்ந்ததில் கடமையிலிருந்த தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.


பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அன்ரன் ஜெயக்குமார் (வயது 29) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

25-05-2001

HAPPY BIRTHDAY



### செல்வன் கணேஷ் சாருஜன்

சீனிவாசகம் வீதி, கொட்டடியைச் சேர்ந்த

**கணேஷ் - குணரஞ்சினி**

தம்பதிகளின் செல்வப்புதல்வன்

### சாருஜன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.05.2001) வெள்ளிக்கிழமை தனது இத்தாலி இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சாருஜனை அப்பா, அம்மா, கொட்டடி அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, மச்சாள், மச்சான், அரசடிப் பிள்ளையார் கோயிலடி இராமகிருஷ்ணன் அப்பப்பா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பா, பெரியம்மா, பிரான்ஸ் மாமா, மாமி மற்றும் சுவிஸ் சித்தப்பா, சின்னம்மா, தம்பி ஆகியோர் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
நா.குணரட்ணம்
(அம்மப்பா)

*இல.67, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (88143)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பூத்தது....
1975.02.08

உதிர்ந்தது....
2001.04.24

### அமரர் பாலசிங்கம் சிவபாலன்

(மோகன்)

(ஆசிரிய மாணவன்,
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - பலாலி)

நண்பா!

ஒன்றாய்க் கூடிச் சிரித்து மகிழ்ந்து
பறித்து பந்தாடி பகிர்ந்துண்டு வாழ்ந்தோமே!!
பாடிக் களித்துப் பாசமாக இருந்த - எம்
கூடு இன்று காலனால் கலைந்ததோ!!

நண்பா!

நேற்றுப்போல் இருக்குதடா!
எம்மோடு நீ உறவாடி இருந்தது.......?
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை மாறா பொன் முகமும் - எம்
மனத்திரையில் வந்துவந்து போகிறதே.....!
கண்களில் நீர்முட்ட - நாம்
காத்திருக்கின்றோம் உன் வரவுக்காய்.......!
உன் ஆத்மாவின் சாந்திக்காய்
என்றுமே பிரார்த்திக்கின்றோம்.

அமரர் பாலசிங்கம் சிவபாலன் அவர்களின் பூதவுடல் தற்காலிக இல்லத்தில் இருந்தவேளை நேரில் கலந்துகொண்டு துயரில் பங்கேற்றவர்களுக்கும், அவரது பூதவுடலைப் பூநகரிக்குக் கொண்டு செல்ல சகல விதத்திலும் ஒத்துழைத்து உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.........

-விடுதி நண்பர்கள்.
(ROOM MATES)

*26/26, வளாக வீதி,*
*திருநெல்வேலி.* (88132)


## சாவகச்சேரி ஆசிரியர் சம்பளம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களின் மே மாத சம்பளம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் வழங்கப்படுமெனவும், அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் ஆசிரியர்கள் அனைவரும் வரவுச் சான்றிதழ்களுடன் வருகைதருமாறும் அதிபர் திருமதி சி.சிவநாதன் அறிவித்துள்ளார். (ஐ-117)

## கசிப்பு விற்றவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து யாழ். நீதிவான் இ.த. விக்னராசா 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற இவ்வழக்கில் கொட்டடி அபூபக்கர் வீதியைச் சேர்ந்த பெருமாள் கிருஷ்ண மூர்த்தி என்பவருக்கே 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

தண்டப்பணம் கட்டத் தவறும் பட்சத்தில் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நீதிவானின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து குற்றவாளி உடனடியாக 5 ஆயிரம் ரூபாவை செலுத்தியதுடன் மிகுதித் தொகையைச் செலுத்த தவணை எடுத்துச் சென்றார். (க-6)

## நுண்கலைமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பம்

இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் போன்ற துறைகளில் நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதிபெற விரும்பும் தகுதியுடையவர்களிடம் இருந்து யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இராமநாதன நுண்கலைக்கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1999,2000ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களை எடுத்த ஒருவர் க.பொ.த(உ.த.)வில் மொத்தப்புள்ளி 180க்கு குறையாமல் எடுத்து, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2000 - ஆகஸ்ட் பரீட்சையில் மூன்று பாடங்களை எடுத்த ஒருவர் மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் சித்தி பெற்று, 135க்கு குறையாத திரட்டுப் புள்ளியைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் பொது சாதாரண வினாத்தாளில் முப்பது வீதத்துக்கு குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு அறியலாம்.

விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-152)

## பனை, தென்னைகள் கண்டபடி தறிப்பு

அரியாலைப் பகுதியில் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதியில் உள்ள பனை, தென்னை மரங்கள் தறிக்கப்பட்டு வருவது குறித்து பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்

காவலரண்கள் அமைக்க நாளாந்தம் இப்பகுதியில் மரங்கள் கண்டபடி தறிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)


## பெயர் மாற்றம்

மேரிகரோலின்,
டிக்சன்ஜெலாசியஸ்,
மேரியூட்டிலானி
**ஆகிய எனது பிள்ளைகளின் பெயரை**
**24.05.2001இல் இருந்து**
*** குமுதினி**
*** டிக்சன்**
*** டிலானி**
*என மாற்றம் செய்துள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.*

**இ.அன்ரன்கிறேசியஸ்**
**125, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**


## கோண்டாவிலில் நடமாடும் செயலக சேவை

நல்லூர் பிரதேச செயலக இடம்பெயர் சேவை இ...31 ஆம் திகதி கோண்டாவில் பகுதயில் நடைபெறவுள்ளது.

இந்த இடம்பெயர் சேவையின் போது கோண்டாவில் பகுதி மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக கேட்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பிரதேச செயலக அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து இடை நிறுத்தப்பட்டு மீண்டும் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தரோடைக் கிராமத்தைச் சேர்ந்தவரும்
கந்தரோடை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும்
சுன்னாகம் ப.நோ.கூ.ச. கந்தரோடைக் கிளைத் தலைவரும், தமிழ் ஆசிரியர் சங்க மானிப்பாய் தொகுதிக் கிளையின் முன்னாள் தலைவரும்,
இளைப்பாறிய அதிபருமான

### திரு.தம்பு நடராசா


அவர்கள் நீதி அமைச்சரினால் **அகில இலங்கை சமாதான நீதிவானாக** நியமிக்கப்பட்டு அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்ததைப் பாராட்டி வாழ்த்தி இவரின் சேவைகள் மேன்மேலும் ஓங்க அருளானந்த விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பி - பரமேஸ்வரன்
நண்பர்கள் { ஆ.தேவராசன், ஆ.சி.கணேசவேல், து.பரமசிவம்பிள்ளை }

*கந்தரோடை,*
*சுன்னாகம்.*



## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### கிருஸ்ணபிள்ளை தேவதாஸன்

(தாஸ்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1968-09-02 | 2001-05-03 |
| (தெல்லிப்பழை) | (பிரான்ஸ்) |

அவர்கள் 03.05.2001 அன்று அகால மரணமடைந்ததையிட்டு எமது கண்ணீரஞ்சலிகளைக் காணிக்கையாக்கி அவர் தம் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

துயருறும்:
S.கருணாமூர்த்தி
குடும்பத்தினர்.

அருணாசலம் பாடசாலை வீதி,
முத்து மண்டபம்,
*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.*

(88179)



## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை தேவதாஸன் (தாஸ்)

புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தேவதாஸன் 03.05.2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் சேதுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தம்பு - பொன்னு தம்பதிகளின் பேரனும், குகதாஸன், நந்தினி, சிறீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரதிதேவி, கருணாமூர்த்தி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆகாஸ், அபிஷன் ஆகியோரின் சிறிய தந்தையும், சுஜீபன், துர்க்காயினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26-05-2001) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை இங்கும், வெளிநாட்டிலும் உள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
கிருஸ்ணபிள்ளை சேதுப்பிள்ளை
(தாயார்)

*அருணாசலம் பாடசாலை வீதி,*
*முத்து மண்டபம்,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

(88178)

# பாதீனிய அழிப்பு நடவடிக்கையில் பொதுமக்களின் பங்களிப்பு அவசியம்

## சங்கானை நிகழ்வில் விவசாயப் பணிப்பாளர்

சங்கானை, மே 25

பாதீனிய அழிப்பு நடவடிக்கையில் பொதுமக்களும் ஆர்வத்துடன் இணைந்து பங்களிப்பு செய்ய வேண்டும் —இவ்வாறு மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் ச. சின்னத்துரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சங்கானையில் இடம்பெற்ற பாதீனிய அழிப்பு நடவடிக்கையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

விவசாயப் பயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள பாதீனியம் முற்றாக அழிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் பாதீனியம் பரவி உள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சங்கானையிலுள்ள தனியார் மற்றும் பொதுக் காணிகள் உட்பட, பல இடங்களிலும் உள்ள பாதீனியம் அழிக்கப்பட்டு தீமூட்டி எரிக்கப்பட்டது.

(க-5-28)

## வாசகர் திருமுகம்

# நூலக உசாத்துணைப் பகுதி விரிவடைவது அவசியம்

மனித சமூகத்தின் அறிவுத் தேடலுக்கு நூலகங்கள் இன்றியமையாதவை. சில தசாப்தங்களுக்கு முன்பு, அவற்றின் பயன் அறியப்படாது மக்களால் அதிகம் பயன்படுத்தப்படாதிருந்தன. ஆனால் இன்று அந்நிலை மாறி விட்டது. நூலகங்களில் மக்கள் நிறைந்து காணப்படுவது அதனை எடுத்துக்காட்டுகிறது.

யாழ். மக்களின் அறிவுக்கருவூலமாக, கல்விக் களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் எரித்து அழிக்கப்பட்ட பின் இரண்டு தசாப்தங்களாக, இக்கட்டான நிலையிலும் யாழ். மக்களின் அறிவுத் தேடலை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்து வரும் யாழ்ப்பாணத்தில் பரந்திருக்கும் நூலகங்கள் பாராட்டுக்குரியவை.

பலவிதமான இடர்ப்பாடுகள், பிரச்சினைகளுக்கு மத்தியில், சேவை நோக்கில் திறம்பட இயங்கி வரும் இந்நூலகங்கள் மூலம் பல தரப்பட்ட மக்களும், முக்கியமாக பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பெரும்பயனை நுகர்ந்து வருகிறார்கள்.

தற்காலத்தில் தனியார் நூலகங்களும் பொது நூலகங்களைப் போன்று சிறப்பாக இயங்கி வருகின்ற போதும் இலாப நோக்கமே அவற்றின் குறிக்கோளாக விளங்குகிறது.

இந்நூலகங்களை பொதுவாக இரவல் கொடுக்கும் பகுதி, உசாத்துணைப்பகுதி எனப்பிரித்து நோக்கலாம். ஒரு நூலகத்தை இவ்விரு பகுதிகளுடனும் இயக்க வைப்பது தற்காலத்தில் சாதாரண விடயமல்ல. அந்த வகையில் இவ்விரு பகுதிகளுடன் இயங்கும் நூலகங்கள் பாராட்டத்தகுந்தன.

இப்பகுதிகளில் உசாத்துணைப்பகுதியே மாணவர்கள், உத்தியோகத்தர்களின் கல்வியியல் ரீதியான அறிவுத் தேடலுக்கு வழிசமைத்து வருகிறது. பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரங்கள் தவிர்ந்த நேரங்களிலும், பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரை நேரந் தவிர்ந்த நேரங்களிலும் பெரும்பாலும் இந்த உசாத்துணைப் பகுதிகளில் தமது அறிவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வருகிறார்கள்.

இன்றைய பாடசாலை மாணவர்களின் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைவான ஒப்படை வேலைத் திட்டங்கள் நூலகங்களைச் சார்ந்தே உள்ளன. எனவே பாடசாலை மாணவர்கள் அடிக்கடி இந்த உசாத்துணைப் பகுதிகளை நாடுவது தவிர்க்க முடியாதது. பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரை மூலமாகப் பெற்ற அறிவைப் பெருக்கிக் கொள்ள உசாத்துணை பகுதிகளையே நாடுவர். இரவல் வழங்கும் பகுதிகள் பெரும்பாலும் கற்பனைக் கதை நூல்களையே தம்மகத்துள் கொண்டுள்ளதால் உசாத்துணைப்பகுதி முக்கியம் பெறுகிறது.

இவ்வகையில், நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பொது நூலகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் யாழ். பல்கலைக்கழகம் இப்பிரதேச சபைக்கு உட்பட்டு அமைந்துள்ளதாலும். எனவே பல்கலை மாணவர் பல்கலைக்கழக நூலகம் தவிர பொதுவாக, இந்நூலகங்களையே நாடுவதால் இந்நூலகங்களின் பிரயோகம் அதிகரிக்கிறது.

ஆனால் பாடசாலை, பல்கலை மாணவர்களுக்கு இந்த உசாத்துணைப் பகுதியை நாடக்கூடிய நேரம் பெரும்பாலும் மாலை நேரமாகும். பல்கலை மாணவர் ஒன்பது மணி (மு. ப) இற்கு உட்பட்ட வேளையிலும் இப்பகுதியை அணுக முடியும். ஆனால் இப்பகுதி மு.ப. 10 .00 மணியளவிலேயே ஆரம்பமாகும். மாலை 5 மணியுடன் முடிவடையும் இக்காலப் பகுதி இம் மாணவர்கள் இப்பகுதியைப் பயன்படுத்த முடியாத நேரமாகும்.

எனவே உசாத்துணைப் பகுதியை மட்டும் சற்று முன்னதாக ஆரம்பித்து பின்னதாக மூடினால், மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய வசதி ஏற்படும்.

எனவே மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி உசாத்துணைப் பகுதிகளின் சேவையை விரிவடையச் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் நூலகநிர்வாகம் மாணவர்களின் பாராட்டைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

ஜெ. பிறேம்குமார்

கோக்குவில்.

# கணனிப்பிரிவு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 25

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கணனிப் பிரிவு, கற்றல், கற்பித்தல், மூலவள நிலையம் ஆகியவற்றின் அங்குரார்ப்பண வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிறுவனத்தின் அதிபர் த. வரதராஜா தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரையும் பங்கு பற்றவிருக்கின்றனர்.

(க-3)

# முதுபெரும் கவிஞர் காலமானார்

முதுபெரும் கவிஞரான யாழ் ஜெயம் என அழைக்கப்படும் ம. விக்ரர் (80வயது) கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை மாரடைப்பால் காலமானார்.

இவரது பூதவுடல் அஞ்சலிக்காக யாழ்ப்பாணம் மடம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஆஸ்தான கவிஞரான இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கலாமன்றத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

மரபுக்கவிஞரான இவர் பல கவிதை நூல்களைப் படைத்துள்ளதுடன் பலரின் நூல்களுக்கு முன்னுரைகளையும் எழுதியுள்ளார்.

(க-51)

# 10 ஆண்டுகளின் பின் ஆலயத்தில் மஹோற்சவம்

காரைநகர், மே 25

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்மன் கோயில், வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

கடந்த பத்து வருடங்களுக்குப் பின்னர் முதற்றடவையாக இவ்வாண்டே மஹோற்சவம் நடைபெறவுள்ளது. இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு அண்மையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# மல்லாகத்தில் சுகாதார விழா

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தேசிய சுகாதார வார விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார்.

மற்றும் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் உட்பட பல பிரமுகர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

சுகாதார வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற கட்டுரை, கவிதை, சுவரொட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

சுகாதாரத் தொண்டர்களுக்கிடையில் நடைபெற்ற அறிவுப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், தெரிவு செய்யப்பட்ட இரண்டு ஆரோக்கியமான பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரண்டு ஆரோக்கியமான குழந்தைகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

# சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், மே 24

மல்லாகம் பெரியதம்பிரான் கோயில் வருடாந்தப் பொங்கல் நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (க-173)

★ ★ ★

தென்புலோலி சாரையடி வீரபத்திரர் கோயிலில் வைகாசி விசாகப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். பொங்கலை ஒட்டி அன்றைய தினம் இரவு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (க-173)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி திருக்குட்வாயில் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். இம்மஹோற்சவத்தில் இரதோற்சவம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தோற்சவம் 4 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறும்.

மஹோற்சவக் காலங்களில் தினமும் மாலை 5.15 மணி முதல் 6.15 மணி வரை சிவானந்த வாரிதி சிவத்திரு. வ. குமாரசாமி ஐயாவினால் 'உபதேசகாண்டம்' எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (ஜ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

நல்லூர் ஸ்ரீபூதேவி சமேத மகா விஷ்ணு ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பத்து நாள்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி மானம்பூ ... திருக்கல்யாண வைபவமும் இடம்பெறவுள்ளது.

(க-5)

★ ★ ★

கோப்பாய், மே 25

கொண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழநி ஆண்டவர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

ஜூன் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணிக்கு இரத உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10. 30 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஐ)

★ ★ ★

கோப்பாய், மே 25

அராலி வடக்கு இலந்தைத் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 .30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

ஜூன் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணிக்கு இரத உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10. 30 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

மஹோற்சவக்கிரியைகளை சிவஸ்ரீ ப. சண்முகராஜக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஐ-72)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான விஷு வருஷ மகோற்சவம், இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (க-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 25

ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தின் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையைத் தொடர்ந்து திருப்பலியும் மறையுரையும் இடம்பெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறவுள்ளன. (க-10)

★ ★ ★

அல்லைப்பிட்டி புனித பிலிப் நேரியார் ஆலய வருடாந்தத் திருவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நற்கருணை ஆராதனையும், நாளை சனிக்கிழமை திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் நடைபெறும். (க)

★ ★ ★

இளவாலை, பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் திருவிழா நவநாள் வழிபாடுகள் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளி மாலை 5. 30 மணிக்குத் திருப்பலியுடன் நற்கருணை ஆராதனையும் நடைபெற்று, நாளை சனி காலை 7.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் நடைபெறும்.

(க)

★ ★ ★

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நடைபெறும்

(க-73)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் ஜீவரட்ணம் ஸ்தபதி
(கலாபூஷணம்)

திருநெல்வேலி, காளி கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் ஜீவரட்ணம் ஸ்தபதி அவர்கள் காலமான தையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முத்துமாரி அம்மன் கோயில்,
திருநெல்வேலி.

(88198)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆசாரி
(கலாபூஷணம்)

திருநெல்வேலி, காளி கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆசாரி அவர்கள் 24-05-2001 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி கனகராசா,
மகன்:– ராஜ்பதி.

117/17, சி.வி. றோட்,
தில்லை நகர்,
திருகோணமலை.

(சி/16840)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
திரு. ஜீ. ஜெயதீஸ்
(Fine Arts Special)
அவர்களின் அன்புத் தந்தையார்

கலாபூஷணம்
### ஆ. ஜீவரட்ணம் ஸ்தபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதி வருட மாணவர்கள்
கலைப்பீடம்

யாழ். பல்கலைக்கழகம் (88204)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பியின் பாசமிகு தாயார்
### திருமதி சாந்தகுமார் ஜீவமணி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் அத்துடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

2001 வர்த்தகப் பிரிவு,
மாணவிகள்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

சி/16850

## கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம்
### ஆறுமுகம் ஜீவரட்ணம் (தேர்சுரபி)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,
ஸ்ரீ பர்வதவர்த்தினி தேவஸ்தானம்,
ஊரெழு,

ஒடையம்பதி கற்பகவிநாயகர்
தேவஸ்தானம், உரும்பிராய்.

(88214)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் ஜீவரட்ணம்
(சிற்பக்கலை ஞர் சிற்பாசாரியார் காளிகோவிலடி, திருநெல்வேலி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ரூபி நகைமாளிகை
111/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. இல. 024–2828

(சி/6852)

## மர்மப் பொருள் வெடித்து ஒருவர் காயம்

தென்மராட்சி, மே 25

மீளக் குடியமர்வதற்கென வளவினைத் துப்புரவு செய்து குப்பையை எரித்த போது தனுதுள்ளிருந்த மர்மப் பொருள் வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கதிரேசு பாஸ்கரன் (வயது 29) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

சம்பவம் நடந்த வீட்டில் முன்னர் படையினர் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-127)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 25

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 375 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 49 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம–6)

## ஆலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள்

யாழ்ப்பாணம், மே 25

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீஞான வைரவர் ஆலயத்துக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரம் இராசமலர் தம்பதியினர் இந்த ஒலிபெருக்கி சாதனங்களை மேற்படி ஆலயத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

(க–5)

## 24 விவசாயிகளுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், மே 25

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் விவசாய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 24 பயனாளிகளுக்கு மீளளிப்புக் கடன் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முயற்சியாளர்களை ஊக்குவிப்பதன்மூலம் அவர்களது பொருளாதாரத்தை வளம்படுத்தி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்தெரிவு செய்யப்பட்ட 24 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

(க–6)

## நினைவு தினம்

காரைநகர், மே 25

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபர் கலாநிதி ஆ. தியாகராசாவின் இருபதாம் ஆண்டு நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

வித்தியாலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு அதிபர் பண்டிதர் மு. க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவு உரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளை, வியாவில் சைவ வித்தியாலய அதிபர் ஆ. குமரேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர்.

(க–73)

## வெற்றுச் சாக்கு, உரப்பை விற்பனைக்குண்டு

14 - 06 - 2001 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

– பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம் ப.நோ. கூ. சங்கம் (வ–து)
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/16845)

## இதய அஞ்சலி

பிரபல சிற்பாச்சாரியார்
### ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

V.T. இராஜேந்திரா ஜே. பி.
(குடும்பம்)

R/2 4 அன்டர்சன்,
தொடர்மாடி,
கொழும்பு.

(சி/16847)

## கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம்
### ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்களின் காலம் முந்திய இழப்பு கலை உலகிற்குச் சிறப்பாகச் சித்திரத் தேர்ப் பணிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரரின் கைவண்ண முத்திரை சைவ உலகம் முழுவதும் பதிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆறுமுகம் சிற்பாலயத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

டாக்டர் க. சிவராசா
(பறாளாய் முருகன் அடியான்)

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(சி/16854)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் தனலட்சுமி

காரைநகரைப் பிறப்பிடமாகவும், இல. 77, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தனலட்சுமி நேற்று (24 – 05 - 2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் (தரகர்)—காலஞ்சென்ற பரஞ்சோதி தம்பதிகளின் அன்பு மகளும், தனபாலசிங்கத்தின் (யாழ். — காரைநகர் குமரன் கொமினிக்கேசன் உரிமையாளர்) அன்புச் சகோதரியும், பரமேஸ்வரியின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25 - 05 – 2001) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தனபாலசிங்கம்
(சகோதரன்)

இல. 77, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2765

(88200)

### முருகேசு மார்க்கண்டு

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மார்க்கண்டு நேற்று (24 - 5 - 2001) வியாழன் காலமானார்.

அன்னார் இலகவதியின் அன்புக் கணவரும், சிவஞானசுந்தரம் (U. K.), காலஞ்சென்ற சிவஞானவல்லி மற்றும் சிவஞானசெல்வம் (ஆசிரியை, வட்டு இந்துக் கல்லூரி), சிவராணி (U. K.), சிவமலர் (ஆசிரியை, சென். ஜோசப் வித்தியாலயம்), சிவனேஸ்வரி (உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்), சிவகலா (பல் வைத்தியர், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அஜந்தா (U. K.), ஜெகநாதன், ஸ்ரீவிஜயராஜன் (U. K), காலஞ்சென்ற சிறீகாந்தன் (சிறிலங்கா ரெலிகொம்) மற்றும் குமாரசாமி (உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்) ஆகியோரின் மாமனாரும், திருமதி செல்லமுத்து கனகசபை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஆசிரியர்)யின் அன்புச்சகோதரரும், ஜனனி (U. K.), ஆரணி (U. K.), பிரதீபன், தயாளினி, சங்கவி (U. K.) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25 – 5 – 2001) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 1. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அராலி பூனாவளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

அராலி தெற்கு,
அராலி, வட்டுக்கோட்டை.

(88203)

கௌரவ அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தாவை



# பாராட்டுகின்றோம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மீள இயக்க, யாழ். மக்களுக்கு குறைந்த விலையில் சீமெந்து கிடைக்க, தொழிற்சாலையை தனது அமைச்சின் கீழ் பொறுப்பேற்றதற்கு 10 வருடங்களுக்கு மேலாக கஷ்டப் படும் தொழிலாளர்கள், உத்தியோகத்தர், நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சார்பில் நன்றியையும் மகிழ்ச்சி யையும் தெரிவிக்கின்றேன்.

க.அருந்தவராஜா.
நலன்புரி நிறைவேற்று உத்தியோகத்தர்,
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை. (88168)

---

# கண்ணீர்ப் பூக்கள்



கலா பூஷணம்
சிற்பச் சக்கரவர்த்தி
**ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரி**

சிற்பக்கலையின் சிகரந்தனைத் தொட்ட
அற்புதக் கலைஞ!
தேர்க்கலையின் பேரரசே!
உன் கைவண்ணம் காலமெல்லாம் வாழும்

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய
அங்கத்தவர்கள்.
(C/16849)

---

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்
அஜித், சிம்ரன்
மற்றும் பலர் நடித்த

**உன்னைக் கொடு என்னைத் தருவேன்**

காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
(C/16664)

---

**நாகம்ஸ்**
சுன்னாகம்

எம்.ஜி.ஆர். (இருவேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார்
நடித்த

**எங்க வீட்டுப் பிள்ளை**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
ஓரிரு தினங்கள் மட்டும்.
(88152)

---

**லஷ்சுமி**
இணுவில்

இன்று முதல்
அஜித் ,லைலா மற்றும் பலர் நடிப்பில்

**தீனா**

(ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி 10.30, 2.30 (பு.நே.)
சனி, ஞாயிறுகளில்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)
(88217)

---

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின்
நன்றியுடன் சேர்ந்த

# பாராட்டுதலும் வாழ்த்துக்களும்



லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் கடந்த ஒக்டோபர் 2000 இல் இருந்து இதுவரை காலமும் வழங்கப் படாதிருந்தது. லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் அனைவரும்

*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்*
*வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள்*
*மற்றும் இந்து கலாசார*
*அமைச்சர் மாண்புமிகு*

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களை நேரில் சந்தித்து தமது பிரச்சினைகளை, கஷ்ட நிலைமைகளை எடுத்துக் கூறியதன் விளைவாக கௌரவ அமைச்சர் உடனடியாக் செயல்பட்டு தனது அமைச்சின் கீழ் உள்ள புனர் நிர்மாண (RRAN) நிதியிலிருந்து 5 மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை உடன் ஊழியர்களுக்கு வழங்கும்படி தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கி, அதன் பிரகாரம் 23-05-2001 சகல ஊழியர்களுக்கும் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் ஆகிய நாங்கள் மாண்புமிகு அமைச்சர் K.N.டக்ளஸ் **தேவானந்தா** அவர்களை நன்றியுடன் மனமார வாழ்த்துகிறோம். அத்துடன் எமக்கு உதவிபுரிந்த யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் **திரு.க.சண்முகநாதன்** அவர்களையும் பாராட்டுகின்றோம்.

லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்களும்,
கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கமும்
*காங்கேசன்துறை.*
(C/16841)

---

# நான்காவது பிறந்தநாள் வாழ்த்து

25-05-1997 ~ 25-05-2001

HAPPY BIRTHDAY



செல்வன் சிவபாதசுந்தரம் கருணாகரன்

## நவீன்ராஜ்

*அளவெட்டியைச் சேர்ந்த*
திரு.சி.கருணாகரன் (கருணா)
*பண்ணாகத்தைச் சேர்ந்த*
திருமதி க.கலையரசி (கலா)

தம்பதியரின் செல்வப் புதல்வனும், அமரர் ஆசிரியர் இ.நடராசா (ஏழாலை) அவர்களின் பேரனுமான செல்வன் **நவீன்ராஜ்** தனது நான்காவது பிறந்த நாளை இன்று (25-05-2001) வெள்ளிக்கிழமை அமெரிக்காவிலுள்ள தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மா, அக்கா, ஆசைக்குட்டி மாமாவுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை யாழ்.பண்ணாகத்திலுள்ள அன்பு அம்மம்மா, சித்தி, கனடாவிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, சக்திமாமி, மாமா, மச் சான்மார், சுவிஸிலுள்ள பெரியமாமா, சின்னமாமா, லண்டனி லுள்ள அஞ்சுச்சித்தி, சித்தப்பா, தம்பி சாரங்கன், மட்டக் களப்பில் வசிக்கும் பெரியம்மா, அக்கா, அண்ணா, அள வெட்டியில் வசிக்கும் பெரியமாமி, மாமா, மச்சான், மச்சாள், ஜேர்மனியில் வசிக்கும் ஞானம் மாமி, மாமா, மச்சான், வடலியடைப்பில் வசிக்கும் மொழிஅரசி, மாணிக்கம் தாத்தா, இந்தியாவிலுள்ள கிருஷ்ணா அங்கிள், அமெரிக்காவிலுள்ள ஜெனிபேட் மாமா, றணா மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பண்ணாகம் விசவத்தனை முருகன் திருவருளுடன் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் அருளும், அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் திருவருளும் பெற்று, சகல சௌபாக்கியங்களும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், பல்கலையும் கிடைக்கப் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*'நடா பவனம்'*
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

திருமதி ஆ.நடராசா
*அம்மம்மா*
(C/16839)

---

உ
கோண்டாவில் மேற்கு

**ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான**
**பரிபாலனசபை**

# மஹோற்சவ விஞ்ஞாபனம்



| | | |
|---|---|---|
| 26-05-2001 | கொடியேற்றம் | - மு.ப. 11 மணி |
| 02-06-2001 | சப்பறம் | - மாலை 5 மணி |
| 03-06-2001 | தேர் | - காலை 7 மணி வசந்த மண்டப பூசை |
| 04-06-2001 | தீர்த்தம் | - காலை 7 மணி வசந்த மண்டப பூசை |
| 05-06-2001 | பூங்காவனம் | - காலை 8 மணி சங்காபிஷேகம் |
| | | - மாலை 5 மணி திருக்கலியாணம் |

முக்கிய குறிப்பு :-
நிதி, பொருள் கொடுக்கும் அடியார்கள் பரிபாலன சபையுடன் தொடர்புகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். பூஜைகள் பழைய நேரப்படி நடைபெறும்.

தலைவர், செயலாளர்,
*பரிபாலன சபை.*
(88190)

---

உ
சிறுப்பிட்டி மேற்கு

# ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்

நிகழும் மங்கள கரமான விஷு வருடம் வைகாசி மாதம் 12 ஆம் நாள் (26-05-2001) சனிக்கிழமை முதல் தொடர்ந்து 11 தினங்களுக்கு எம்பெருமானுக்கு அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித் துள்ளதால், அத்தினங்களில் அடியவர்கள் யாவரும் வருகை தந்து எம்பெருமானின் திருள் பெற்று வாழும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**விசேடநிகழ்வுகள்**

| | | |
|---|---|---|
| **02.06.2001 சனிக்கிழமை** | - *வேட்டைத்திருவிழா* | பி.ப. 6.00 மணி |
| **03.06.2001 ஞாயிறு** | - *சப்பறத்திருவிழா* | பி.ப. 6.00 மணி |
| **04.06.2001 திங்கள்** | - *தேர்த்திருவிழா* | காலை 8.30 மணி |
| **05.06.2001 செவ்வாய்** | - *தீர்த்தத்திருவிழா* | காலை 8.30 மணி |

ஆலயப்பிரதம குரு:-
கிரியா கலாபமணி சிவஸ்ரீ சி.கிருஸ்ணசாமி குருக்கள்

- பரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு:- *வினோ நகைப்பூங்கா*
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(88191)

## சொல்ஹெய்ம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றேன்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்துக்கு, இலங்கையின் ஐக்கியம் மற்றும் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வு காண்பதற்கு நோர்வே மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

நோர்வேயின் இந்த முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. குறிப்பாக இந்தியாவும் அமெரிக்காவும் மிக நெருக்கமாகச் செயற்பட்டு ஆதரவு வழங்கி வருகின்றன.

தீர்வானது இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாட்டைப் பேணும் அதே சமயம் தமிழ் மக்களின் அனைத்து அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதாகவும் அமைய வேண்டும் என்பதில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஒ[illegible]டன்பாடு காணப்படுகின்றது.

தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடாக பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்புவது அவசியம் என்பதை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நன்கு உணர்ந்துள்ளதாகத் தெரிகின்றது.

பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு இரு தரப்பையும் நிர்ப்பந்திப்பதில் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகளும் உதவ வேண்டும் - என்றார்.

(உ-10)

## நிபந்தனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத பதில் நிபந்தனைகளை முன்வைத்து, அதன்மூலம் சமாதானப் பேச்சை முன்னெடுக்க முடியாத நிலைக்கு புலிகளே காரணம் என்று அவர்கள் மீது சர்வதேச சமூகத்தின் எரிச்சலைத் திருப்பி விடுவதற்கு ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

✪ பேச்சு ஆரம்பிப்பதற்கு முன், புலிகள் தாம் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவிக்க வேண்டும்.

✪ தென்பகுதியில் பயங்கரவாதச் செயல்கள் எதிலும் இனிமேல் எப்போதும் ஈடுபடுவதில்லை என்று பகிரங்கமாகப் புலிகள் அறிவிக்க வேண்டும்.

✪ பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்து - ஒரு குறுகிய காலகட்டத்துக்குள் - தம்மிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றின் கண்காணிப்பின் கீழ் செயற்படாமல் வைப்பதற்கு புலிகள் பகிரங்க இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

இத்தகைய கோரிக்கைகளை அரசு முன்வைக்கலாம் எனவும் -

இது குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் -

செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

(உ)

## நிர்வாக [illegible]வைக்கு...

(முதலாம் பக்க[illegible])

சேவை உட்பட) பூர்த்தி [illegible]வர்கள் அல்லது ஐந்து வருட [illegible]வையுடைய பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதினம் ஜூன் 26. பரீட்சை ஓகஸ்டில் நடைபெறும்.

தமிழ் மொழி தேர்ச்சி பெற்றவர்களில் இருந்து 87 பேரும் சிங்கள மொழி தேர்ச்சி பெற்றவர்களில் இருந்து 31 பேருமாக மொத்தம் 118 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இது[illegible] வர்த்தமானி அறிவித்[illegible] இன்று பிற்பகலில் 'உதயன்' அலுவலகத்துக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படிக் கிடைத்தால் அலுவலக நேரத்தில் உதயன் பணிமனையில் பொதுமக்களின் பார்வைக்கு அது வைக்கப்படும்.

(உ)

## சிற்பாசாரியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மட்டுமன்றி மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலும் சிற்பக்கலையைச் சிறப்புறப் பேணி வளர்த்த இவர், தனது கைபட நூற்றிமுப்பதுக்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை உருவாக்கிப் பரா[illegible]களைப் பெற்றவர்.

வரலாற்றுச் சி[illegible]ப்புமிக்க திரு[illegible]கேதீஸ்வர ஆலயத்தின் ஐந்து திருத்தேர்கள், நல்லூர்க் கந்தனின் தங்க ரதம், திருநெல்வேலி சிவன், முத்துமாரி அம்மன் ஆலயங்களின் தேர்கள், திருகோணமலை பத்திரகாளி, கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம், ஆவரங்கால் சிவன் கோயில் ஆகிய ஆலயங்களின் சித்திரத் தேர்களும் இவரது கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டவையாகும்.

சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பராஜசிம்மன், சிற்பரதவித்தகன், சிற்பகேசரி, தேர்ச்சுரபி, கலாபூஷணம் ஆகிய கௌரவப் பட்டங்களைப் பெற்ற ஜீவரட்ணம் ஆசாரியார் கடந்த சில நாளகளாக சுகவீனமுற்றிருந்தார்.

திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் மீது நிறைந்த பக்தி கொண்ட இவர் தமது உபயமாக பஞ்சதள இராஜகோபுரம் ஒன்றை அமைத்ததை அடுத்து அண்மையில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

(உ)

## 3 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்குள் புகுந்த - நான்கு பேர் கொண்ட - குழு ஒன்று முதலில் தகப்பனையும் (வயது 42), பின்னர் மகனையும் (வயது 21) அவர்களது அந்தரங்க உறுப்பில் சரமாரியாகச் சுட்டுக் கொன்ற பின்னர், அறைக்குள் இருந்த தயாரையும் (வயது 40) இழுத்துச் சுட்டுக் கொன்றுவிட்டு அக்குழு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் இக்குடும்பத்தவர்களுக்கும் இடையில் நிலவிய தகராறே கொலைகளுக்குக் காரணம்.


மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி

லொயலாஸ் நிறுவனத்தின் ஆதரவுடன்

அமரர் அருட்திரு.ஜோண் லொறட் ஞாபகார்த்த

நூல் நிலைய மேம்பாட்டு நிதிக்காக

யாழ்.பேராலய

இளைஞர் உருவாக்கல் இயக்கம் நடத்தும்

"சங்கமம்" இன்னிசை நிகழ்ச்சி

யாழில் முன்னணி வகிக்கும்

'ராகம்ஸ்' இசைக் குழுவினருடன்,

யாழ்.பல்கலைக்கழக பிரபல பாடகர்கள்

இணைந்து வழங்குகின்றார்கள்

இடம் : லொயலாஸ் கல்யாண மண்டபம்

(புனித பத்திரிசியார் கல்லூரி முன்பாக)

காலம்: 27.05.2001 (ஞாயிறு பி.ப.3.00 இ.நே.)

※ ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அன்பளிப்பு: ரூபா 100.00, 50.00

- இளைஞர் உருவாக்கல் இயக்கம்.

(88158)

விளம்பர அன்பளிப்பு:

கணேஷ் உலோக வேலை நிலையம்

288, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.



கணக்கீடு

திரு.பாலவாச[illegible]ர்

B.B.A.(F.M.Spl.)

A/L 2002

ஒப்படைக் கணக்கு

Sat.,Sun. - 7-8 a.m.

ஆரம்பம்: 26.05.01 Sat.7-8

விக்னா

கல்வி நிறுவனம்

(88203)



எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்

இசைப்புயல் A.R.ரஹ்மானின்

☆ஸ்டார்

☆நான்பாட நினைப்பதெல்லாம்

பதிவு செய்யப்பட்ட CD கள்

வர்ணக் கவருடன்

விற்பனைக்குண்டு. விலை:300/=

மெலோடியஸ் மியூசிக்

301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



விஜேயின் நேற்றைய ஓடியோ CD வெளியீடுகள்

இசைப்புயல் A.R.ரஹ்மானின்

☆'ஸ்டார்' STAR

மனோஜ் - மீனாவின்

☆'பதினாறு வயதினிலே'

(அல்பம்)

☆தக்கிட தக்கிட

☆நான்பாட நினைப்பதெல்லாம்

☆ஆண்டான் அடிமை

'இன்னிசை உலா வரும் இன்பச்சோலை'

விஜேய் றெக்கோடிங் சென்ரர்

539, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

கிளை: பிரதான வீதி, மானிப்பாய்.

(88189)



தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு Corel draw, Page Maker இல் Type Setting தெரிந்த முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.

ஆண்கள் விரும்பத்தக்கது.

மூன்றுமாதகால பயிற்சி வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.05.2001

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல:- 1289 மே/பா உதயன்,

கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். (C/16843)



BIT

நீங்கள்...!

(A/L) பரீட்சையில் 3 பாடங்களில் மட்டுமா சித்தி....?

கவலையை விடுங்கள்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டதாரியாகும் அரிய சந்தர்ப்பம்!

இந்தக் கற்கை நெறிக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தால் 2ஆம் தடவையாக அனுமதிப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பப் படிவங்களை எமது தலைமைக்காரியாலயத்திலோ அல்லது கிளைநிறுவனத்திலோ பெற்று 30.05.2001 இற்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

இப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப்பு நாளை சனிக்கிழமை 26.05.2001 பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் இவ்வகுப்பிற்கு தவறாது சமுகமளிக்கவும்.

Director(Ad)
Head Office:
IBMS
NO.701, K.K.S ROAD JAFFNA

Branch:
IBMS, M.M.V Road Nelliyady.
IBMS, Near M.P.C.S, Chankanai.
T.P : 021 3165





ஸ்ரீ விநாயகர்

வீடியோ & ஓடியோ றெக்கோடிங் சென்ரர்



இளைய சமுதாயத்தின் மனங்களில் இடம்பிடித்த எமது ஸ்தாபனம் இன்று (25.05.2001) வெள்ளிக்கிழமை சுபநேரம் பி.ப.12.15-1.00 மணி முதல் பழைய இடத்திலிருந்து நேர் எதிரே இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

வாடிக்கையாளர்களுக்கான எமது புதிய பல சேவைகள்

※ உங்கள் தெரிவுப் பாடல்கள், வீடியோப் படங்கள் CDயில் இருந்து நேரடியாக CDயில் பதிவுசெய்து தரப்படும்.

※ புதிய, பழைய வீடியோ, ஒடியோ CD க்களை வாடகைக்கு (50/=) பெற்றுக்கொள்ளலாம்.

※ புதிய, பழைய தமிழ், ஆங்கில வீடியோப் பிரதிகள் வாடகைக்குக் பெற்றுக் கொள்ளலாம். (ஆங்கிலப் பிரதிகள் 25/=)

※ புதிய, பழைய தமிழ், ஆங்கில, பக்திப்பாடல்கள் CD யிலிருந்து நேரடியாக ஒலிநாடாவில் பதிவு செய்து தரப்படும்.

※ இலத்திரனியல் உதிரிப்பாகங்கள் விற்பனை.

SRI VINAYHAGAR T.P. 021 - 2949

VIDEO & AUDIO RECORDING CENTER

PALALY ROAD, THIRUNELVELY JUNCTION,

THIRUNELVELY

(88147)


## மரண அறிவித்தல்

### சிதம்பரம் கிருஸ்ணபிள்ளை

(சமூக சேவையாளர்)

துன்னாலை மத்தியைச் சேர்ந்த சிதம்பரம் கிருஸ்ணபிள்ளை (சமூக சேவையாளர்) நேற்று (24.05.2001) வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பவானந்தன் (காணிப் பதிவாளர், புதுக்குடியிருப்பு), பரமதாஸ் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை), பகீரதன் (கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்), திருமதி இ.பிறேமாவதி, திருமதி இ.பிரபாவதி (ஆசிரியை, ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி), பத்மகாந்தன் (மானிப்பாய் றோ.க.பாடசாலை), பிரபாகரன் (சுவிஸ்), பாக்கியநாதன் (ஆசிரியர், யா/தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ப.ஜெயபாரதி, ப.யோகரத்தினம், ப.கிருபநாயகி, க.ராஜேஸ்வரன் (லிகிதர், மின்சாரசபை, சுன்னாகம்), ச.இராசசேகரன் (சரவணாஸ் - யாழ்ப்பாணம்), ப.குகமலர் (தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), பி.நிஷாந்தினி (சுவிஸ்), பா.சுகந்தினி (ஆசிரியை, யா/தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

(C/16858)

தகவல்:
கி.பரமதாஸ் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.